வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 03 23.06.2022 வியாழக்கிழமை இதழ் : 199 பக்கங்கள் : 16

## சிங்களத் தாதியர்கள் நியமனத்தால் வடக்கு-கிழக்கில் மொழிப் பிரச்னை!

### சபையில் சுட்டிக்காட்டினார் சிறிதரன் எம்.பி.

கொழும்பு, ஜூன். 23

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள வைத்தியசாலைகளில் பெருமளவிலான சிங்களவர்கள் தாதியர்களாக நியமிக்கப்படுவதால் மொழிப்பிரச்னை ஏற்படுகின்றது எனச் சுட்டிக்காட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்குத் தமிழ் தாதியர்களை நியமிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சுகாதார நெருக்கடிகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் 15

## எரிபொருள் விநியோகத்தின்போது துன்பங்கள் தடுக்கப்படவேண்டும்!

### ஸ்ரீகாந்தா கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜூன். 23

இன்றைய சூழ்நிலையில் தினமும் பல்வேறு இடர்களுக்கு முகம் கொடுத்து நிற்கும் பொது மக்களிற்கு, எரிபொருள் விநியோகத்திலும் அநாவசியமாக மேலதிக துன்பங்கள் ஏற்படுவது தடுக்கப்பட்ட வேண்டும் என தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் சட்டத்தரணியுமான ந.ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. 15

# இலங்கையை மீட்பது எளிதான விடயமல்ல!

## உண்மை நிலையை சபையில் எடுத்துரைத்தார் பிரதமர் ரணில்

கொழும்பு, ஜூன் 23

**முற்றிலும் சரிந்த பொருளாதாரத்தைக் கொண்ட ஒரு நாட்டை - குறிப்பாக ஆபத்தான முறையில் அந்நிய கையிருப்பு குறைவாக உள்ள ஒரு நாட்டை மீட்டெடுப்பது எளிதான காரியமல்ல. ஆரம்பத்தில் பொருளாதாரத்தின் வீழ்ச்சியை மெதுவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தால், இன்று நாம் இந்த கடினமான சூழ்நிலையை எதிர் கொண்டிருக்க வேண்டி வந்திருக்காது. ஆனால், இந்த வாய்ப்பை இழந்தோம். மிகக் கீழே விழுந்துவிடக்கூடும் என்பதற்கான அறிகுறிகளை இப்போது காண்கிறோம். இருப்பினும், இந்த சூழ்நிலையிலிருந்து நாம் வெளியே வரவேண்டும். இல்லை என்றால் நாட்டில் வேறு எந்த பிரச்னைக்கும் தீர்வு காண முடியாது எனத் தெரிவித்துள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.**



நேற்று பாராளுமன்றத்தில், நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து விசேட உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார். (அ)

*(பிரதமரின் உரை முழுமையாக 14ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது)*

## நியூயோர்க் நீதிமன்றத்தில் இலங்கைக்கு எதிராக மனு

நியூயோர்க், ஜூன். 23

அடுத்த மாதம் 25 ஆம் திகதி முதிர்ச்சியடையும் பிணை முறிகளுக்கான கொடுப்பனவை செலுத்த தவறுகின்றமை தொடர்பில் பிணை முறிக்கு உரித்துடைய தரப்பு நியூயோர்க் பிராந்திய நீதிமன்றில் வழக்கு தொடர்ந்துள்ளது.

வெளிநாட்டு கடன்களை தற்காலிகமாக செலுத்த முடியாது என மத்திய வங்கி அறிவித்திருந்தது.

இதற்கு எதிராக இலங்கையின் 250 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பிணை முறிகளை கொண்டுள்ள ஹமில்டன் வங்கியினால் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

குறித்த பிணை முறிகளின் முழுத் தொகையையும் வட்டியுடன் செலுத்துக் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (அ)

## பௌத்த தர்மநெறியின் தோற்றுவாய் இந்து மதம்

### வீரசேகரவுக்கு சித்தார்த்தன் பதில்

கொழும்பு, ஜூன் 23

மத அடையாளமானது இனத்தின் அடையாளமாகாது. பௌத்த மதத்தின் தோற்றுவாய் இந்துசமயம்தான் இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் கூறியுள்ளார்.

அத்துடன், “அநுராதபுரத்தில் திராவிட முறையில் கட்டப்பட்ட 20இற்கும் மேற்பட்ட சைவ ஆலயங்களின் இடிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. பொலநறுவையில் 12 சைவக்கோவில்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அந்த ஆலயங்கள் தேசிய மரபுரிமை சின்னங்களாகக் கருத்தப்பட்டனவே தவிர, அவை மீளுருவாக்கம் செய்யப்பட வில்லை. அப்படி இருக்கும்போது 15

## எரிபொருள் நிலையத்தை சுற்றிவளைத்த 4 பேர் கைது!

வடமராட்சி, ஜூன் 23

நள்ளிரவில் எரிபொருள் விநியோகம் செய்த பருத்தித்துறை - கொட்டடி எரிபொருள் நிலையத்தை மக்கள் சுற்றிவளைத்து மறித்தனர். இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் நால்வர் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

நேற்று முன்தினம் நள்ளிரவு வேளை குறித்த எரிபொருள் நிலையத்திலிருந்து வசதி படைத்த சிலருக்கு டீசல் நிரப்பி அனுப்பப்பட்டது.

இந்த விடயத்தை அறிந்த அப்பகுதி மக்கள் எரிபொருள் நிலையத்தை சுற்றிவளைத்தனர். 15

## பாராளுமன்றை மூடுங்கள்!

### கோருகிறார் தயாசிறி ஜயசேகர

கொழும்பு, ஜூன். 23

நாட்டை மீட்டெடுப்பதற்கான எந்தவொரு திட்டமும் அரசாங்கத்திடம் இல்லை என்றால் பாராளுமன்றத்தை மூட வேண்டும் என ஆளும் கட்சியின் சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கேட்டுக்கொண்டார்.

இதுவரையில் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காணப்படவில்லை எனவும், பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பேசியே நெருக்கடியை தீர்க்க முயற்சிக்கின்றனர் எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

இந்த அரசாங்கம் சர்வ கட்சி கட்சி அரசாங்கம் அல்ல என்பதனால் தேசிய சபையை உருவாக்கி, அதன் மூலம் புதிய பிரத 15

## இந்திய,அமெரிக்க உயர்மட்ட குழுக்கள் இலங்கை வருகை!

கொழும்பு, ஜூன். 23

இலங்கைக்கான உதவிகள் குறித்து ஆராய, இந்தியாவின் உயர்மட்டக் குழு இன்று நாட்டுக்கு வருகை தரவுள்ளது.

மேலும், அமெரிக்க இராஜாங்க திணைக்களக் குழு அடுத்த வாரம் இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் 200 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்படவுள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார். (அ)

## இப்படியும் நடக்கிறது...!

இந்தியாவில் பிரபல ஆன்மீக சொற்பொழிவாளராக இருந்த ஞானி ஒஷோ சொன்ன வார்த்தை ஒன்றை அண்மையில் படிக்க முடிந்தது.

'எந்த வேஷமும் நெடு நேரம் நிலைத்திருக்காது! உங்கள் வேஷத்தை மக்கள் கண்டுபிடிக்க வெகு நேரமாகாது. ஆனாலும் மரியாதைக்காக, நீங்கள் வேஷம் போடுகிறீர்கள் என்று உங்களிடம் அவர்கள் சொல்லுவதில்லை. ஒருவரை ஒருவர் ஏமாற்றிக்கொள்வது நாகரீகமாகிவிட்டது'!

இந்த வார்த்தையைப் படித்தபோது முன்னர் படித்த கதை ஒன்று ஞாபகத்திற்கு வந்தது.

அவர் ஒரு பெண்ணைக் காதலித்தார். காதல் எல்லாம் நல்லபடி போய்க்கொண்டிருந்தபோதிலும் அவருக்கு, அவருடைய கண்பார்வை மட்டும் மங்கலாகிக்கொண்டே போனது.

தனக்கு கண்பார்வை சற்று குறைவடைந்துவிட்டதோ என்ற சந்தேகம் அவரது காதலிக்கும் வேறு ஏற்படத் தொடங்கியிருந்தது.

ஒரு டாக்டரிடம் ஆலோசனை கேட்டார். அதற்கு அவர் கூறினார்:

'ஒன்று செய்யலாமே! வெகு தொலைவுவரை உம்மால் பார்க்க முடிவதுபோல் நடியுங்கள். இப்படி, அவள் நம்பும்படி ஏதாவது செய்து பாரும்' என்றார்.

அவருக்கும் இது நல்ல யோசனையாகப் பட்டது. ஒரு நாள் பூங்காவில் உட்கார்ந்திருந்தபோது அவருக்கு ஒரு யுக்தி தோன்றியது. தூரத்தில் இருந்த ஒரு மரத்தில் யாருக்கும் தெரியாமல் ஒரு தையல் ஊசியைக் குத்திவிட்டு வந்தார். நல்ல கண்பார்வை இருந்தால்கூட அவ்வளவு தொலைவில் உள்ள ஊசியை யாராலும் பார்க்க முடியாது.

மாலை இரவில், அந்த மரத்திலிருந்து நூறு அடி தொலைவில் தன் காதலியுடன் உட்கார்ந்திருந்தார். திடீரென அவளிடம், "அதோ அந்த மரத்தில் பொறுப்பில்லாமல் யாரோ ஒரு தையல் ஊசியை குத்தி வைத்திருக்கிறார்களே" என்று கூறினார்.

ஏற்கனவே அவரின் கண்பார்வையின்மேல் சந்தேகம் கொண்டிருந்த அவளுக்கு, இவ்வளவு தொலைவில் ஒரு ஊசி இருப்பதை அவரால் எப்படி காணமுடிந்தது என்று சந்தேகம். அவளாலும் அதை பார்க்க முடியவில்லை . "ஊசி ஒன்றும் தெரியவில்லையே" என்றாள்.

அவர் பந்தாவாக எழுந்து, " என்னோடு வா, அதை எடுத்து தருகிறேன்" என்று கூறியபடி நடக்கலானார். ஓரிரண்டு அடி வைத்ததுமே தொப்பென்று தரையில் விழுந்தார். எதிரில் ஓர் எருமை மாடு நின்று கொண்டிருந்தது, இவர் கண்ணுக்குத் தெரியவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த இருபத்தியோராவது அரசமைப்புத் திருத்தம் குறித்தும், அது தயாரிக்கப்பட்டதன் பின்னணியிலுள்ள சில சந்தேகங்களையும் இந்தப் பத்தியில் ஏற்கனவே கோடிகாட்டி, இந்த ஊர்க்குருவிக்கு ஏற்பட்ட சந்தேகங்களையும் எழுதியிருந்ததை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

சில மாதங்களுக்கு முன்னர் ஆச்சரியம் தரும்வகையில் கூட்டமைப்பு தலைவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள பத்திரிகை ஆசிரியர்களை சந்தித்திருந்தனர்.

அந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஆபிரகாம் சுமந்திரன், இந்த திருத்த வரைபை தானே தயாரித்திருந்ததாகவும், அதில் தமிழ் மக்களுக்கு பயனுள்ள வகையில் எத்தகைய திருத்தங்களை தான் சேர்த்ததாகவும் விளக்கமளித்திருந்தார்.

தற்போது நடைமுறையிலுள்ள அரசமைப்புப்படி, மாகாண அதிகாரங்களில் ஆளுநருக்கு அளவுகடந்த அதிகாரங்கள் உண்டு. மாகாண சபை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினாலோ அல்லது சட்டங்களை தயாரித்தாலோ அதனை ஆளுநர் நிராகரிக்கலாம். அல்லது, ஏற்றுக்கொள்ளாமல் விடலாம். ஆனால், அதற்கு எதிராக நீதிமன்றத்தைக்கூட நாட முடியாது.

இந்த சரத்தை நீக்குகின்ற வகையில் யோசனைகளை தான் சேர்த்திருப்பதாகவும், அதாவது, ஆளுநரின் அதிகாரங்களைக் குறைக்க முயன்றிருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

அந்த யோசனைகளே இன்று உயர் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. அல்லது, அதனை சர்வசனவாக்கெடுப்பு ஒன்றின் மூலமே நிறைவேற்றவேண்டும் என்று தீர்ப்பிட்டிருக்கின்றது.

நாடு இன்று எதிர்கொள்ளும் நெருக்கடிக்கு இருபதாவது திருத்தமே காரணம் என்றும், பத்தொன்பதை மீண்டும் கொண்டுவர வேண்டும் என்றுமே பரவலாக கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்காக இருபதாவதை நீக்கிவிட்டு பத்தொன்பதைக் கொண்டு வருவதென்பது எந்த சட்ட சிக்கலுமின்றி கொண்டுவரக்கூடியது. பாராளுமன்றத்திலும் யாரும் எதிர்ப்பதற்கு அதற்கான காரணத்தைக்கூறி நியாயப்படுத்தியிருக்க முடியாது.

இந்த நேரத்தில், எதற்காக இந்த விஷப் பரீட்சை நடாத்தப்பட்டது என்பது, அதனைத் தயாரித்தவர்களுக்கு மாத்திரமே புரிந்துகொள்ளக்கூடியது. அது நல்ல விடயம்தானே, தமிழ்மக்கள் பயன்படக்கூடியவாறு ஒரு திருத்தத்தை சஜித் அணியும் அதனைத் தயாரித்தவர்களும் செய்ய நினைத்தது நல்லதுதானே என்று சிலர் வாதிடலாம், நல்லதுதான்.

அதனையே 'ஈழநாடு'ம் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றது. இன்றுள்ள சூழலில் பதின்மூன்றை வலுப்படுத்த தமிழ் தரப்பில் முயற்சி எடுக்கவேண்டும் என்று வாதிட்டுவரும்போது, செய்யப்படுகின்ற அரசமைப்பு திருத்தத்தில், ஆளுநரின் அதிகாரங்களைக் குறைப்பது நல்லதுதானே என்று நினைப்பது தவறில்லைத்தான்.

ஆனால், இவ்வாறு ஒரு திருத்தம் கொண்டுவரப்படுகின்றபோது, அது அரசமைப்புக்கு விரோதமானதாக இல்லாதவகையில் தயாரிக்க முயன்றிருக்க முடியாதா என்றும் கேட்கவேண்டியிருக்கின்றது.

அல்லது, இருபத்தியொராவது திருத்தத்தை செய்வதை தவிர்த்து, நாட்டில் நெருக்கடி நிலையை தொடரச் செய்தால், ஒரேயடியாக புதிய அரசமைப்பு கொண்டுவரவேண்டிய நிலைமை வரலாம். அப்போது, நமக்குத் தேவையான சமஷ்டிக் கட்டமைப்பைப் பெற்றுவிடலாம் என்று கணக்குப்போட்டார்களோ தெரியவில்லை!

- ஊர்க்குருவி

# 'நூறு மலர்கள் மலரட்டும்' புத்தக அரங்க விழா!

யாழ்ப்பாணம், ஜூன் 23

தேசிய கலை, இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் "நூறு மலர்கள் மலரட்டும்" என்ற தலைப்பிலான புத்தக அரங்க விழா இந்த மாதம் 24, 25, 26 ஆம் திகதிகளில் எதிர்வரும் வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மல்லாகம் மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

நாடக ஆற்றுகைகள், கலை, இலக்கிய கலந்துரையாடல்கள், மாபெரும் புத்தகக் கண்காட்சி - மலிவு விற்பனை ஆகிய அம்சங்களுடன் வெகு விமரிசையாக இடம்பெறவுள்ள இந்த விழாவை ஆரம்பித்து வைக்கும் முகமாக ஈழத்து இலக்கியங்களை அறிவோம் - நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் நிகழ்வின் முதலாவது அமர்வு வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

எழுத்தாளரும் பதிப்பாளரும் நடுஇணைய இதழின் ஆசிரியருமான கோமகன் நினைவான இந்த அரங்குக்குத் தாயகம் சஞ்சிகையின் நிர்வாக ஆசிரியரும், எங்கட புத்தகங்கள் சஞ்சிகையின் இணை ஆசிரியரும், ஆய்வாளருமான ச. சத்தியதேவன் தலைமை தாங்கவுள்ளார்.

நூல்களின் அறிமுக உரைகள் வரிசையில் கவிஞர் சி.சிவசேகரத்தின் "ஆச்சியின் கொண்டையூசிகள்" கவிதைத் தொகுப்பு பற்றி சட்டத்தரணியும், எழுத்தாளருமான சோ. தேவராஜாவும், பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த் துறையின் அனுசரணையுடன் சிறுகதை ஆற்றுப்படை வெளியீடான "முகிழ்" சிறுகதைத் தொகுப்பு தொடர்பாக ஆசிரிய ஆலோசகரும், எழுத்தாளருமான க.சிவகரன், குழந்தை ம. சண்முகலிங்கம் மொழிபெயர்ப்பில் வெளிவந்த பெடோல் பிறெக்ற் இன் "கோகேசிய வெண்கட்டி வட்டம்" நாடகப் பிரதி தொடர்பாக ஆசிரியரும், எழுத்தாளருமான ஸ்ரீலேகா பேரின்பகுமார் , நா. நவராஜின் "கெடுவாய் மனனே கதிகேள்" நூல் தொடர்பாக உளவளத் துணையாளரும், சமூக செயல்பாட்டாளருமான செ.திலீபனின் தெணியானின் "மரக்கொக்கு" நாவல் தொர்பாக கலாசார உத்தியோகத்தர் ச. தனுஜனும் உரையாற்றவுள்ளனர். நிகழ்ச்சித் தொகுப்பை இளம் எழுத்தாளரான மாதவி உமாசுதசர்மா மேற்கொள்வார்.

இந்த நிகழ்வுகளைத் தொடர்ந்து மாலை 6.30 மணியளவில் செம்முகம் ஆற்றுகைக் குழுவினரின் எலியார் எங்கே போனார்?, கோமாளிகள் ஆற்றுகை போன்ற சிறுவர் நாடகங்கள் அரங்கேறவுள்ளன.

முற்றிலும் இலவசமாக இடம்பெறுகின்ற இந்த முற்போக்கான மக்கள் கலை, இலக்கிய முன்னெடுப்பில் ஆர்வமுள்ள அனைவரையும் இணையுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அழைப்புவிடுத்துள்ளனர். (ஐ)

# போதைப் பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு சங்கானையில்!

யாழ்ப்பாணம், ஜூன் 23

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடத்தும் சர்வதேச போதைப் பொருள் எதிர்ப்பு தின விழிப்புணர்வு நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சங்கானையில் நடைபெறவுள்ளது.

சங்கானை பேருந்து நிலையத்தில் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் தலைவர் க. புஸ்பராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளாக, சங்கானை பிரதேச செயலர் திருமதி பொ. பிறேமினி, யாழ். பல்கலைக்கழக பதிவாளர் வி. காண்டீபன், வலி. மேற்கு பிரதேச சபை தவிசாளர் த. நடனேந்திரன், வலம்புரி நாளிதழ் பிரதம ஆசிரியர் ந. விஜயசுந்தரம், இதம் நிறு வன முகாமையாளர் திருமதி த. சுமதி, யாழ்ப்பாணம் ஹெல்தி லங்கா இணைப்பாளர் தே. பிறேம்குமார் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில், மது ஒழிப்பு சம்பந்தமான வீதியோர நாடகமும் இதம் நிறுவனத்தின் இளையோர் மன்றத்தால் நடத்தப்படும்.

மேலும், நடை பவனியும், விழிப்புணர்வு பிரசாரமும், புலமைப் பரிசிலில் சித்தியடைந்த இரு மாணவர்களுக்கு கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ஐ)

## திருமுறை விண்ணப்பம்!

யாழ்ப்பாணம், ஜூன் 08

அச்சுவேலி உலவிக்குளம் சித்திவிநாயகர் ஆலயம், சிவ காமஞானபானு சிவஸ்ரீச. குமாரசுவாமி குருக்கள் அறக் கட்டளை, பிரித்தானிய சைவ முன்னேற்ற சங்கம், இந்தியா - சேலம் பன்னிரு திருமுறைகள் பகுப்பாய்வு மையம் என்பன இணைந்து நடத்தும் சிவநெறிய திருமுறை விண்ணப்பம் - தொடர் 68 இன்று வியாழக்கிழமை மாலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில், சூம் செயலியின் 417 892 9023 என்ற அடை யாள எண் மூலம் 202811 என்ற கடவுச் சொல்லைப் பயன்படுத்தி இணைய முடியும். (ஐ)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், ஜூன் 14

உலகெங்கும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமான வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இறை ஆசி வேண்டி பிரார்த்தனை நடைபெறுகிறது.

இந்தப் பிரார்த்தனை வரிசையில் இன்று வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் - துன்னாலை இந்திரன் கண்ணகை அம்மன் கோவிலின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ சி. இந்திரராஜக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் தமிழ் சேவையில் நேரடியாக ஒலிபரப்பாகும். (ஐ)

## பெரியபுலம் ம. வியின் இசை வெளியீட்டு விழா!

யாழ்ப்பாணம், ஜூன் 23

கொக்குவில் பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் 200ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையின் கனகசிங்கம் மண்டபத்தில் இசை வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது.

பாடசாலையின் பழைய மாணவன் ரஜீவனின் இசையமைப்பில் உருவான '200 ஆவது ஆண்டு விழா நிறைவு கீதம்', புதுப்பொலிவுடன் இசையமைக்கப்பட்ட "பாடசாலைக் கீதம்" என்பன வெளியீடு செய்யப்படவுள்ளன.

பாடசாலையின் பழைய மாணவரும் யாழ். பல்கலைக்கழகத்தின் கல்வியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ம.சத்தியகுமார் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தின் நடனத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அருட்செல்வி கிருபைராஜா, சிறப்பு விருந்தினர்களாக பாடசாலை அதிபர் ந. பரமேஸ்வரன், இசைவாணர் மு. கோபாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu
23.06.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், ஆனி 09

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# சம்பந்தனின் இப்போதைய பணி?

இலங்கையின் பொருளாதார நிலைமைகள் தொடர்பில் சம்பந்தன் அண்மையில் வெளிநாட்டு ஊடகமொன்றுடன் உரையாடியிருந்தார். தமிழ் மக்களின் பிரச்னை தீர்க்கப்படாமையால்தான், நாடு இவ்வாறானதொரு பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்திருப்பதாகக் கூறியிருந்தார். இதே கருத்தை ஏனைய தமிழ் அரசியல்வாதிகள் சிலரும் பேசியிருக்கின்றனர். சித்தார்த்தன் பேசியிருக்கின்றார். பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன், அதற்கும் மேல், சிங்களவர்களின் கர்மவினையென்றும் குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால், இவைகளெல்லாம் தமிழர் பார்வைகள்.

ஆனால், சம்பிக்க ரணவக்கவை தவிர வேறு யாரும் அண்மைய நாட்களில் தமிழ் மக்களின் பிரச்னை தீர்க்கப்படாமை தொடர்பில் பொதுவெளிகளில் பேசவில்லை. உல்லாசப் பயணத் துறையின் வீழ்ச்சி, வெளிநாட்டிலிருந்து அனுப்பப்படும் பணத்தில் ஏற்பட்ட திடீர் வீழ்ச்சி - இவற்றின் காரணமாகவே, நாடு இவ்வாறானதொரு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்றது - இதுதான், தென்னிலங்கையின் பொதுவான பார்வையாக இருக்கின்றது. இந்த நிலையில் பொருளாதார வீழ்ச்சிக்கான காரணங்களுடன் மல்லுக்கட்டுவதை விட்டுவிட்டு, தமிழர் பக்கத்தில் செய்ய வேண்டியது என்ன - என்பது தொடர்பில்தான், தமிழர் தலைமைகள் என்போர் சிந்திக்க வேண்டும். ஏனெனில், கோட்டாபய சென்றவுடன் தமிழர் பிரச்னை தீர்ந்துவிடப் போவதில்லை. இதனை கருத்தில் கொண்டுதான் விடயங்களை நோக்க வேண்டும்.

சம்பந்தனுக்குப் பின்னர் கூட்டமைப்புக்கு என்ன நடக்கும்? இந்தக் கேள்வியுடன்தான், பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் தங்களின் நாட்களை எண்ணிக் கொண்டிருக்கின்றனர். ஏனெனில், சம்பந்தனுக்குப் பின்னர் கூட்டமைப்பை, தற்போதிருக்கின்ற நிலையில் முன்கொண்டு செல்வதற்கு எந்தவொரு நம்பிக்கையான சூழலும் இல்லை. ஆகக்குறைந்தது கூட்டமைப்பின் பேச்சாளர் பதவியைக்கூட, பங்காளிக் கட்சிகள் விரும்பியவாறு தீர்மானிக்க முடியவில்லை. சுமந்திரன் வெளியில் பேச்சாளராகவே இப்போதும் அடையாளப்படுத்துகின்றார் - ஆனால், பங்காளிக் கட்சிகளோ அவ்வாறு தாங்கள் எவரையும் நியமிக்கவில்லையென்று இப்போதும் கூறிக் கொண்டிருக்கின்றன. சம்பந்தன் இருக்கின்றபோதே, நிலைமை இவ்வாறிருக்கின்றபோது, சம்பந்தன் இல்லாவிட்டால் என்ன நிகழும்?

இது தொடர்பில் சிந்திக்க வேண்டிய சம்பந்தனோ - பொருளாதார நெருக்கடி பற்றி பேசிக் கொண்டிருக்கின்றார். ஒன்றை முதலில் தமிழ் தலைமைகள் என்போர் புரிந்துகொள்ள வேண்டும் - மக்களும் புரிந்துகொள்ள வேண்டும். அதாவது, தமிழ் மக்களின் பிரச்னைதான் பொருளாதார நெருக்கடிக்கான அத்திபாரமென்று நாங்கள் கூறிக்கொண்டிருக்கின்ற போதுதான், மறுபுறம், இலங்கையை மீட்பதற்கு இந்தியா தொடர்ந்தும் உதவி வருகின்றது. அமெரிக்கா உதவுகின்றது. குவாட் நாடுகள் உதவுகின்றன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர்கூட, இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு உதவ வேண்டுமென்று கூறுகின்றார். இதே நாடுகளைத்தான், நாங்களும் நம்பியிருக்கின்றோம். இவர்களின் அழுத்தங்கள் மூலம், இலங்கையை பணியவைத்து, எங்களுக்கான நீதியை பெறமுடியுமென்னும் நம்பிக்கையின் அடிப்படையில்தான், கடந்த 13 வருடகள் கழிந்திருக்கின்றன.

ஆனால், இவர்கள் எவரும் தமிழ் மக்களின் பிரச்னையையும் பொருளாதார நெருக்கடியையும் இணைத்து நோக்கவில்லை. அதனை ஒரு நிபந்தனையாக முன்வைக்கவில்லை - ஏன்? உலக நாடுகளின் நகர்வுகள் அனைத்தும் திட்டமிடப்பட்ட ஓர் அடித்தளத்திலிருந்தே இடம்பெறும். எங்களுடைய பிரச்னைகளை முன்வைத்து எவரும் இலங்கையை அணுகப் போவதில்லை. மனித உரிமை, ஜனநாயகம் என்னும் அடிப்படையில், பொதுவாகவே, விடயங்களை நோக்குவார்கள். நாங்கள்தான் எங்களுடைய நலன்களை முன்னிறுத்தி குறிப்பிட்ட சூழலை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று சிந்திக்க வேண்டும் - செயல்பட வேண்டும்.

நாம் கவனத்தில் கொள்ள வேண்டியது ஒன்றுதான். சுவரிருந்தால்தான், சித்திரம் வரையலாம். எனவே, எங்களை அரசியல் ரீதியில் வலுப்படுத்திக் கொள்வது எப்படியென்று மட்டும்தான் நாம் சிந்திக்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை ஒவ்வொரு கட்டத்திலும் செய்ய வேண்டும். இந்த பின்புலத்தில் நோக்கினால், சம்பந்தன் இப்போது உடனடியாக செய்ய வேண்டியது ஒன்றுதான். அதாவது, கூட்டமைப்புக்கான அடுத்த தலைமைத்துத்தை தீர்மானிக்க வேண்டும். தனது பொறுப்புக்களை ஒப்படைக்க வேண்டும். ஒரு தற்காலிக ஏற்பாடாக, தனது பாராளுமன்ற குழுத் தலைவர் பொறுப்பைப பங்காளிக் கட்சிகளின் தலைவர் ஒருவரிடம் ஒப்படைக்க வேண்டும். கூட்டமைப்பை தொடர்ந்தும் இதுபோன்ற நிலையில் முன்கொண்டு செல்வதற்கு ஏற்றவாறு, மூன்று கட்சிகளின் தலைவர்களையும் உள்ளடக்கிய இணைத் தலைமையொன்றை அறிவிக்க வேண்டும்.

# எரிபொருள் இல்லாமையால் மக்கள் பொறுமை காப்பதே உண்மை!

அலசுவது இராஜதந்திரி



இலங்கையில் திரும்புமிடமெல்லாம் எரிபொருள் பெறுவதற்காக மக்கள் தமது வாகனங்களோடு நீண்ட வரிசையில் கால் கடுக்கக் காத்து நிற்கின்ற தருணத்தில் முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சரத் வீரசேகர முல்லைத்தீவு குருந்தூர்மலையில் புத்த விகாரையை ஸ்தாபிப்பது சம்பந்தமாகப் பொறுப்பற்ற விதத்தில் பேசியுள்ளமையையே அவதானிக்க முடிகின்றது.

நாடு எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளது. இதன் காரணமாக எவ்வேளையிலும் ஒரு பெரும் மக்கள் புரட்சி வெடிக்கலாம் என்று கூட பேசப்பட்டு வருகின்றது. இத்தகைய தருணத்தில் குருந்தூர்மலையில் பௌத்த விகாரை அமைப்பது சம்பந்தமாக எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டமை தொடர்பாக தென்னிலங்கை மக்கள் பொறுமை காத்து வருகின்றனர் என்று சரத் வீரசேகர கூறியிருப்பதன் மூலம் அவர் சரியான முறையில் நாட்டு மக்களின் உணர்வுகளை நாடிபிடித்தறிந்துள்ளாரோ? என்றே எண்ணத் தோன்றுகின்றது.

நேற்று முன்தினம் ஜனாதிபதியின் பிறந்த தினமாகும். ஆனால், அந்தத் தினத்தில் காலி முகத்திடலில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக “கோட்டா கோ கம” ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதிமீது மிக மோசமான முறையில் வசை பாடியிருந்தனர்.

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருந்தது. இல்லாவிடில் ஆர்ப்பாட்டக்காரர்கள் அந்தச் செயலக நுழைவாயில் கதவையும் உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்திருப்பர்.

எனவே, சிங்கள மக்கள் பொறுமை இழந்திருப்பது நாட்டின் தற்போதைய பொருளாதார நிலவரம் தொடர்பாகவே என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், நாட்டு மக்கள் முல்லைத்தீவு குருந்தூர்மலை விவகாரம் தொடர்பாக பொறுமை காத்து வருகின்றனர் என்று பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர குறிப்பிட்டுள்ளமை பொருளாதார நெருக்கடி குறித்து கலவரமடைந்துள்ள நாட்டு மக்களின் கவனத்தை முல்லைத்தீவு குருந்தூர்மலை விவகாரம் தொடர்பாக திசை திருப்பி ஓர் இன ரீதியான சர்ச்சையை ஏற்படுத்த அவர் முனைகின்றாரோ என்றே எண்ணத் தோன்றுகின்றது. நாட்டின் பெரும்பாலான மக்களின் உணர்வுகளை பிரதிபலிப்பதாகவே கோட்ட கோ கம ஆர்ப்பாட்டம் விளங்குகின்றது.

கோட்டா கோ கம மக்கள் மத்தியிலிருந்து பலதரப்பட்ட கோஷங்களும் வெளிவருகின்றன. வடக்கு - கிழக்கு மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பாகவும் கோட்டா கோ கமவில் குரல் எழுப்பப்பட்டு வருகின்றது.

ஆகவே, சரத் வீரசேகர குறிப்பிட்டது போல குருந்தூர் மலை விவகாரம் தொடர்பாக பெரும்பாலான சிங்கள மக்கள் அக்கறை கொள்ளவில்லை. அவர்கள் நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடி குறித்தே கவலை கொண்டுள்ளனர்.

குருந்தூர் பிரதேசத்தில் புராதன காலத்தில் சிவன் ஆலயமொன்றே அமைந்திருந்தது. கிழக்கு இலங்கையில் வடக்கு முதல் தென் பகுதி வரையிலான கரையோர பகுதிகளை எடுத்துக்கொள்ளும்பட்சத்தில் சிவன் கோயில்கள் பல இருந்தமைக்கான வரலாற்றுச்சான்றுகள் நிறையவே இருந்ததை வரலாற்றாய்வாளர்களும் புதைபொருள் ஆய்வாளர்களும் உறுதி செய்துள்ளனர்.


இலங்கையைக்கூட சிவபூமி என்றே இராமாயண காலம் முதல் குறிப்பிடப்படுகின்றது. இலங்கையை ஆண்ட இராவணன் கூட ஒரு பெரும் சிவ பக்தன் என்றே குறிப்பிடப்படுகின்றான்.

இத்தகைய பின்னணியில் முல்லைத்தீவு நீதிமன்றம்கூட குருந்தூர்மலை விவகாரத்தில் வெளியார் தலையிடுவதற்கு தடை விதித்துள்ள நிலையில் அப்பாவி சிங்கள மக்களை குருந்தூர்மலை வரை அழைத்து வந்து நெருக்கடியான பொருளாதார சூழ்நிலையில் குழப்பத்தை ஏற்படுத்த அமைச்சர் சரத் வீரசேகர முயற்சித்துள்மை எவ்வளவு தூரம் பொறுப்பற்ற செயலாக இருக்கின்றது என்பதையே அறிய முடிகின்றது.

எனவே, பொருளாதார நெருக்கடியில் இருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்ப மக்களை தூண்டிவிடும் முயற்சியில் விஷம சக்திகள் முற்படலாம் என்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவினதும் அவரன் ஆதரவாளர்களினதும் குருந்தூர் பயணம் நல்ல எடுத்துக்காட்டாக இருக்கின்றது.

இருந்தபோதிலும் மக்கள் சரத் வீரசேகரவின் “அரசியல் வித்தை“யில் சிக்கப்போவதில்லை என்றே கருத முடியும். கடந்த மாதம் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கோட்டா கோ கம ஆர்ப்பாட்டக்காரர்களை விரட்டியடிக்க முயற்சித்து பின்னர் வன்முறையைச் சந்தித்ததை சரத் வீரசேகர கவனத்தில்கொள்ள வேண்டும். எனவே “ நீறு பூத்த நெருப்பாக“ இருக்கின்ற முல்லைத்தீவில் அங்குள்ள மக்களது உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதே உயர்வான நல்லிணக்கத்துக்கு வழிவகுக்கும் எனக்கருதலாம்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஜுன் - 23 வியாழக்கிழமை
சுபகிருது வருடம் - ஆனி 09
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : தசமி




## இன்றைய ராசிபலன்

**மேடம்**
அடிப்படை வசதிகளை அதிகரித்துக் கொள்ள செலவுகள் செய்வீர்கள். முயற்சியில் போராடி வெற்றி பெறுவீர்கள். தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். அந்தஸ்து உயரும்.

**இடபம்**
நிதிநிலை உயரும். கொடுக்கல் வாங்கலில் இருந்த பிரச்னை சரியாகும். வீட்டில் சுப நிகழ்சிக்குரிய பேச்சு முடிவிற்கு வரும். எதிர்பார்ப்பு நிறைவேறும். குடும்பத்தினரின் தேவையை நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்**
தொழிலில் ஏற்பட்ட தடைகளை சரிசெய்வீர்கள். முயற்சி வெற்றியாகும். வேலை வாய்ப்பிற்காக முயற்சி மேற்கொண்டவர்களுக்கு சாதகமான பதில் வரும். முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

**கடகம்**
தொல்லை கொடுத்தவர்கள் விலகிச் செல்வர். நினைத்ததை சாதிப்பீர்கள். தொழிலில் உங்கள் கைமேலோங்கும். மனதில் நம்பிக்கை அதிகரிக்கும். சுபச்செலவு செய்து மகிழ்வீர்கள்.

**சிம்மம்**
மற்றவரை நம்பி பணிகளை ஒப்படைக்க வேண்டாம். அதனால் சங்கடமே உண்டாகும். முயற்சிகளில் தடைகளும் தாமதங்களும் உண்டாகும். சிந்தித்து செயல்பட வேண்டும். மனம் குழப்பமடையும்.

**கன்னி**
எண்ணம் நிறைவேறும் நாள். நண்பர்களால் புதிய பாதை தெரியும். திட்டமிட்டிருந்த செயல்களை திட்டமிட்டபடி நிறைவேற்றி முடிப்பீர்கள். கூட்டுத் தொழிலில் இருந்த பிரச்னை விலகும்.

**துலாம்**
உங்கள் அணுகுமுறையை மாற்றி செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். வேலை வாய்ப்பு குறித்த சிந்தனை மேலோங்கும். இஷ்ட தெய்வ வழிபாடு நன்மையளிக்கும். பிரச்னைகள் முடிவிற்கு வரும்.

**விருட்சிகம்**
குடும்ப உறவுகளிடம் செல்வாக்கு உயரும். எண்ணங்கள் நிறைவேறும். நீங்கள் ஈடுபடும் முயற்சி ஒன்றில் ஆதாயம் காண்பீர்கள். பணி புரியும் இடத்தில் அதிகாரியின் பாராட்டிற்கு ஆளாவீர்கள்.

**தனுசு**
உங்கள் முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள். எதிர்பார்த்த ஆதாயம் உண்டு. பணியில் உண்டான பிரச்னைகளை சரி செய்வீர்கள். செல்வாக்கு வெளிப்படும் நாள். லாபமான நாள்.

**மகரம்**
நீங்கள் எதிர்பார்த்தவற்றில் ஆதாயம் காண்பீர்கள். எதிரி தொல்லை விலகும். பணியில் இருந்த சங்கடம் விலகும். புதிய பொறுப்பு, பதவி உங்களைத் தேடி வரும். செல்வாக்கு உயரும்.

**கும்பம்**
திட்டமிட்டு செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். குடும்ப நலனில் அக்கறை கொள்வீர்கள். பிரபலங்களின் நட்பால் எண்ணம் பூர்த்தியாகும். பண வரவு மகிழ்ச்சி தரும். உங்கள் தேவை பூர்த்தியாகும்.

**மீனம்**
நேர்மறை எண்ணம் உருவாகும். பொன் பொருள் சேர்க்கையில் கவனம் செலுத்துவீர்கள். வருவாய் அதிகரிக்கும். சுப நிகழ்ச்சி நடத்த முயற்சிகளை மேற்கொள்வீர்கள். வியாபாரத்தை விரிவு செய்ய முயற்சிப்பீர்கள்.

# இலங்கைக்கு நிவாரணப் பொருள் தூத்துக்குடியிலிருந்து புறப்பட்டது!

தூத்துக்குடி, ஜுன் 23

இலங்கை மக்களுக்கு தூத்துக்குடி வ. உ. சிதம்பரனார் துறைமுகத்தில் இருந்து கப்பல் மூலம் மேலும் ஒரு தொகுதி அத்தியாவசிய பொருட்கள் நேற்றுப் புதன்கிழமை அனுப்பி வைக கப்பட்டுள்ளது.



இலங்கை மக்கள் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கிய நிலையில் அந்த மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் தமிழகத்திலிருந்து அனுப்பி வைக்கப்படும் என தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அறிவித்திருந்தார்.

இதனையடுத்து மத்திய அரசின் அனுமதியுடன் கடந்த மே மாதம் ஒரு கப்பலில் பொருட்கள் சென்னையில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து அரிசி, பால் பொருட்கள், மருந்துப் பொருட்கள் பெறப்பட்டது.

தூத்துக்குடி துறைமுகத்தில் வி. டி. சி. சன் என்ற கப்பலில் பொருட்கள் ஏற்றப்பட்டு இந்த கப்பல் பயணத்தை தமிழக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி கே. எஸ். மஸ்தான், தமிழக உணவு மற்றும் குடிமைப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் ஆர். சக்கரபாணி, தமிழக சமூக நலன் - மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பெ. கீதாஜீவன், மீன் வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா, ஆர். ராதாகிருஷ்ணன் ஆகியோர் நேற்று கொடியசைத்து அனுப்பி வைத்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான்,

“பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள உள்ள மக்களுக்கு உதவுவதற்காக இரண்டாவது கட்டமாக இன்று (நேற்று) இந்த கப்பலில் 14,700 தொன் அரிசி, 250 தொன் ஆவின் பால் பொருட்கள், 50 தொன் மருந்து பொருட்கள் என மொத்தம் 61 கோடியே 71 லட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள் அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் மூன்றாம் கட்டமாக பொருட்கள் அனுப்பப்படும் - என்றார்.

# அ. தி. மு. க. பொதுக்குழுக் கூட்டத்தை உறுப்பினர்கள் புறக்கணிக்க வேண்டும்

## பன்னீர்செல்வம் கோரிக்கை

சென்னை, ஜுன்

அ. தி. மு. க பொதுக்குழு கூட்டத்தை உறுப்பினர்கள் புறக்கணிக்க வேண்டும் என அந்தக் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் கடிதம் மூலம் கோரிக்கை வைத்துள்ளார்.

பொதுக்குழு கூட்டம் திட்டமிட்டபடி இன்று வியாழக்கிழமை நடைபெறும் என எடப்பாடி பழனிசாமி தரப்பிலிருந்து உறுதியாக தெரிவிக்கப்பட்ட நிலையில், கடிதம் மூலம் ஓ.பன்னீர்செல்வம் கோரிக்கை வைத்துள்ளார்.

சென்னை வானகரத்தில் அ. தி. மு. க. பொதுக்குழு கூட்டம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான ஆயத்தப் பணிகளில் எடப்பாடி பழனிசாமி தரப்பினர் ஈடுபட்டுள்ளனர். பொலிஸார் உயர்நீதி மன்ற உத்தரவுப் படி பாது



காப்பு வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

பொதுக்குழு கூட்டத்துக்குகு அனுமதி தரக்கூடாது என்றும், பாதுகாப்பு வழங்கக் கூடாது எனவும் ஓ.பன்னீர் செல்வம் தரப்பிலிருந்து ஆவடி காவல் ஆணையரகத்திற்கு மனுவாக கோரிக்கை வைக்கப்பட்டது.

எனினும், உள் அரங்கில் கூட்டம் நடைபெறுவதால், அதற்கு தடை விதிக்க முடியாது என்றும், உயர்நீதிமன்ற உத்தரவுப்படி பாதுகாப்பு வழங்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனால் பொதுக்குழு கூட்டம் திட்டமிட்டபடி நடைபெறுவதற்கான அனைத்து சாத்தியக்கூறுகளும் எடப்பாடி பழனிசாமி வசம் உள்ளது. இதனிடையே பன்னீர் செல்வத்துக்கு ஆதரவு அளித்து வந்த சில மாவட்ட செயலாளர்கள் எடப்பாடி அணிக்கு பக்கம் மாறியுள்ளனர்.

இந்நிலையில், அ. தி. மு. க. நிர்வாகிகள் யாரும் பொதுக் குழு கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டாம் என ஓ.பன்னீர் செல்வம் கோரியுள்ளார். (ஐ)

# பிரச்னைகளை பேசித் தீர்ப்போம் பொது கூட்டத்துக்கு வாருங்கள்!

## ஓ. பி. எஸ்ஸுக்கு எடப்பாடி அழைப்பு

சென்னை, ஜுன் 23

பொதுக்குழு கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் என அ. தி. மு. கவின் ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர் செல்வத்துக்கு இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி கடிதம் மூலம் அழைப்பு விடுத்துள்ளார்.



பொதுக்குழுவுக்கு கட்டாயம் வாருங்கள் பிரச்னைகளை பொதுக்குழுவில் பேசித் தீர்த்துக்கொள்ளலாம் அதில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பொதுக்குழு கூட்டத்தில் சட்டம் - ஒழுங்கு பிரச்னை ஏற்படும் அளவுக்கு அசாதாரண சூழல் ஒன்றும் இல்லை எனக் குறிப்பிட்டுள்ள அவர், திட்டமிட்டபடி பொதுக்குழு - செயல்குழு நடக்கும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒருங்கிணைப்பாளர்கள் என்ற முறையில் இருவரும் இணைந்து பொதுக்குழுவுக்கு அழைத்தது போல, பொதுக் குழுவில் பங்கேற்போம் என எடப்பாடி பழனிசாமி தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

# வவுனியா கிணற்றிலிருந்து ஆணின் சடலம் நேற்று மீட்பு!

வவுனியா, ஜூன் 23

வவுனியா வேப்பங்குளம் பத்திரகாளியம்மன் ஆலயத் திற்கு முன்பாகவுள்ள வாகனங் கள் சேவிர்ஸ் மேற்கொள்ளும் நிலைய வளாக கிணற்றிலிருந்து நேற்றுக் காலை ஆண் ஒருவ ரின் சடலத்தை நெளுக்குளம் பொலிஸார் மீட்டனர்.

குறித்த நபர் நேற்று முன்தி னம் மாலை வீட்டிலிருந்து வெளியேறிய நிலையிலேயே நேற்றுக் காலை கிணற்றி லிருந்து சடலமாக மீட்கப் பட்டார்.

குறித்த மரணம் தற்கொலையா அல்லது கொலையா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை முன்னெ டுத்தனர் வவுனியா நகர் பகுதி யில் இயங்கும் தனியார் வர்த் தக நிலையத்தின் உரிமையா ளரான 50 வயதுடைய அழகர் சாமி விஜயகுமார் என்ற நபரே இவ்வாறு சடலமாக மீட்கப் பட்டவராவார். (அ)

# எரிபொருள் கப்பலுக்கு பணம் செலுத்தப்பட்டது

கொழும்பு, ஜூன் 23

எரிபொருள் கப்பலுக்கான பணம் நேற்று முன்தினம் செலுத் தப்பட்டுள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித் துள்ளார்.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தமது உத்தியோகபூர்வ டுவிட் டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவிலே இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இதன்படி, குறித்த எரி பொருள் தொகைக்காக 34 மில் லியன் அமெரிக்க டொலர் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், எரிபொ ருள் தரையிறக்கும் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்ட துடன், குறித்த எரிபொருள் முன் உற்பத்தி மற்றும் தொழிற் சாலைகளின் தேவைகளுக்கு பயன்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ)



# பிரதமரின் வதிவிடத்தை முற்றுகையிட மகளிர் அணியை களமிறக்கிய சஜித்!

கொழும்பு, ஜூன் 23

பிரதமர் ரணில் விக்கிரமசிங் கவின் வதிவிடத்தை முற்று கையிட்டு, ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் அணி போராட்டத்தில் குதித்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் உத்தியோகபூர்வ இல்லத்தின் நுழைவாயில் மற்றும் அவரது இல்லத்தின் சுற்றுப்புறங்களில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

"ராஜபக்ஷக்களின் மீட்பரான ரணிலிடம் இருந்து தாய்நாட்டை மீட்போம்" என போராட்டக்களத்தில் இருந்து ஹிருணிக்கா பிரேமசந்திர கூளுரைத்தார்.

வீதித்தடைகளைமீறி, பிர தமரைச் சந்திப்பதற்கு அவர் முன்னோக்கிச் செல்ல முற்பட் டார். எனினும், தடுத்து நிறுத் தப்பட்டார். இதன்போது பெண் பொலிஸ் அதிகாரிகளை கட்டியணைத்த ஹிருணிக்கா, இது அன்பால் நடத்தப்படும் போராட்டம்-என்றார். (அ)



# அரிசி ஆலை உரிமையாளர்களின் செய்தியாளர் சந்திப்பில் களேபரம்

கொழும்பு, ஜூன் 23

**அடுத்த மூன்று மாதங்களுக்கு அரச கட்டுப்பாட்டு விலைக்கே அரிசி விற்பனை செய்யப்படும் எனவும், கட்டுப்பாட்டு விலையில் அரிசியை விற்பனை செய்யாத அரிசி ஆலைகளை அரசே பொறுப் பேற்கவேண்டும் எனவும் இலங்கையின் முன்னணி அரிசி வியாபாரி டட்லி சிறிசேன நேற்றுக் காலை தெரிவித்தார்.**

கட்டுப்பாட்டு விலையை மீறி விற்பனை செய்யப்படும் கையிருப்புகளை அரசாங்கம் கைப்பற்றி நெல் இருப்புக்களை கையகப்படுத்தவேண்டும் என சிறிசேன தெரிவித்தார்.

அரிசியின் விலையை குறைத்து நெல் விலையை அதி கரிப்பதற்கு தானும் ஏனைய பிரதான அரிசி ஆலை உரிமை யாளர்களும் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் எரிபொ ருள் உள்ளிட்ட ஏனைய வசதி களை வழங்க அரசாங்கம் முன் வரவேண்டுமெனவும் சிறிசேன தெரிவித்தார்.

அரிசி வியாபாரிகள் நாட் டில் எத்தனையோ பேருக்கு அரிசியை விற்று லாபம் சம்பாதிக்கிறார்கள். நெருக்கடியான காலத்தில் ஒரு கிலோ அரிசி வாங்க முடியாத நிலையில் உள்ள மக்கள் சார் பில் நடவடிக்கை எடுக்கவேண் டும் என்று அவர் கோரினார்.

இந்த செய்தியாளர் சந்திப் பின்போது, ஏனைய அரிசி ஆலை உரிமையாளர்கள் விலையை அதிகரிக்க முற்படு வதாக தெரிவித்து, டட்லி சிறிசேனா செய்தியாளர் சந்திப் பில் இருந்து முரண்பட்டுக் கொண்டு வெளியேறினார். (அ)

# நொச்சிக்குளம் இரட்டைக் கொலை; மேலும் ஆறு சந்தேக நபர்கள் கைது!

மன்னார், ஜூன் 23

மன்னார் நொச்சிக்குளம் பகுதியில் கடந்த 10 திகதி நடை பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புபட் டதாக சந்தேகிக்கப்படும் மேலும் ஆறு சந்தேக நபர்கள் மன்னார் பொலிஸார் கைது செய்யப்பட்டு நேற்று புதன் கிழமை காலை மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த 10 ஆம் திகதி வெள் ளிக்கிழமை காலை மன்னார் நொச்சிக்குளம் கிராமத்தில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் ஒரே குடும்பத் தைச் சேர்ந்த சகோதரர்களான இரண்டு குடும்பஸ்தர்கள் கொல்லப்பட்டதுடன் இருவர் படுகாயமடைந்தனர்.

குறித்த சம்பவத்தில் 40 வயதுடைய யேசுதாசன் ரோமியோ மற்றும் 33 வயது டைய யேசுதாசன் தேவதாஸ் எனும் உடன் பிறந்த சகோதரர் கள் இருவரே படுகொலை செய்யப்பட்டனர்.

இவ் கொலையுடன் சம்பந் தப்பட்டதாக கைது செய்யப் பட்ட 6 சந்தேக நபர்ளையும் நேற்று புதன்கிழமை காலை மன்னார் நீதவான் முன்னிலை யில் ஆஜர்படுத்தினர்.

கைது செய்யப்பட்ட 6 சந் தேகநபர்களையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கம றியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் உத்தரவிட்டார். இது வரை குறித்த கொலைச் சம்ப வம் தொடர்பாக 18 சந்தேக நபர் கள் கைது செய்யப்பட்டு விளக் கமறியலில் வைக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 13 கோடி பெறுமதி கொண்ட போதை மாத்திரைகள் மீட்பு

கொழும்பு, ஜூன் 23

நெதர்லாந்தில் இருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட பொதியொன்றில் இருந்து பெருந்தொகையான போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட் டுள்ளன.

மத்திய தபால் பரிமாற்றகத் தின் போது சுங்க அதிகாரிகளி னால் குறித்த போதை மாத்தி ரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

போலி முகவரிகளின் ஊடாக அனுப்பப்பட்டள்ள பொதிகளில் இருந்து 13,640 போதை மாத்திரைகள் இவ் வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

இவற்றின் மொத்த பெறு மதி 13 கோடி எனவும் சுங்கப் பிரிவுத் தகவல்கள் தெரிவிக் கின்றன. (அ)

# தொடர் குடியிருப்பில் திடீர் தீ!

## நான்கு வீடுகள் சேதம் 20 பேர் பாதிப்பு

கொழும்பு, ஜூன் 23

ஹற்றன் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட டிக்கோயா தர வளை கீழ்ப் பிரிவு தோட்டத் தில் நேற்றுக் காலை ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 12 வீடுகள் கொண்ட தொடர் குடியிருப் பில் நான்கு வீடுகள் தீயினால் பகுதியளவில் எரிந்து நாசமா கியுள்ளன.

இந்த நான்கு வீடுகளிலும் இருந்த 20 பேர் தற்காலிகமாக உறவினர்கள் வீட்டில் தங்க வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தத் தீ விபத்தின்போது எவருக்கும் தீக்காயங்கள் ஏற் படவில்லை. எனினும், வீடுகளிலுள்ள சில பொருட்கள் தீக்கிரையாகியுள்ளன.

தீ ஏற்பட்டபோது வீட்டில் இருந்தவர்கள் எரிவதைக் கண்டு கூச்சலிட்டனர். உடனே அயலவர்கள் ஓடி வந்து தீயை அணைக்க முயற்சிகளை மேற் கொண்டு தீயைக் கட்டுப்பாட் டுக்குள் கொண்டு வந்தனர்.

இதேவேளை, இது தொடர் பாக ஹற்றன் பொலிஸ் நிலை யத்துக்குப் பிரதேச மக்களால் தகவல் வழங்கப்பட்டது. அதன் பின் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் தீ பரவலுக்கான காரணங்களைக் கண்டறிய மேல திக விசாரணைகளை மேற்கொண் டுள்ளனர். பாதிக்கப்பட்டவர் களுக் கான நிவாரண உதவி களை நோர்வூட் பிரதேச சபை தவிசா ளரும், ஹற்றன் - டிக் கோயா நகர சபை உறுப்பினர் எஸ்.ரட்ணகுமாரும் இணைந்து வழங்கியுள்ளனர். (அ)

# 100,000 மெற்றிக் தொன் எரிவாயுவை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 23

எரிவாயு நெருக்கடியை தீர்க்க எதிர்காலத்தில் 100,000 மெற்றிக் தொன் எரிவாயுவை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற பாரா ளுமன்ற அமர்வின்போதே பிரதமர் இதனைத் தெரிவித் தார்.

மேலும், இந்த எரிவாயு கொள்வனவு நடவடிக்கைக்காக உலக வங்கியின் 70 மில்லியன் அமெரிக்க டொலரும், அரசாங் கத்தின் 20 மில்லியன் டொல ரும் செலுத்தப்படவுள்ளதா கவும் அவர் கூறினார். (அ)

# பிரச்னைக்குத் தீர்வு காண்பதே இலக்கு!

## தம்மிக்க பெரேரா எம்.பி. அறிவிப்பு



கொழும்பு, ஜூன் 23

"இலங்கைக்குப் பணி செய்யவே பாரா ளுமன்றத்துக்குள் வந்தேன். இப்போது என் கடமை - இலக்கு என்னவெனில் பிரச்னைக் குத் தீர்வு காண்பதுதான்."

- இவ்வாறு நேற்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வின் தேசியப்பட்டியல் பாரா ளுமன்ற உறுப்பினராகப் பத விப்பிரமாணம் செய்து கொண்ட பிரபல வர்த்தகர் தம் மிக்க பெரேரா தெரிவித்தார்.

பாராளுமன்றத்துக்கு வெளியே ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே தம்மிக்க பெரேரா எம்.பி. மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

நாட்டுக்குப் பணி செய்யவே நான் இங்கு வந்தேன். நான் பாராளுமன்றத்தில் பதவிப்பிர மாணம் செய்துகொள்வதற்கு முன்னதாகச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர் பான அறிக்கைகளையும் வரி அனுமதி அறிக்கைகளையும் சபா நாயகரிடம் சமர்ப்பித்தேன். அது மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நினைக்கின்றேன்.

நாட்டில் பிரச்னை இருப் பதால்தான் நான் பாராளு மன்றத்துக்கு வந்தேன். இப் போது என் கடமை - இலக்கு என்னவெனில் பிரச்னைக்குத் தீர்வு காண்பதுதான். அதைச் செய்து வெற்றி பெற முடியும் என்று நினைக்கின்றேன். நல்ல தொரு அமைச்சு எனக்குக் கைய ளிக்கப்படும் என நினைக்கின் றேன்-என்றார். (அ)

# பருத்தித்துறையில் மக்கள் போராட்டம்

### யாழ்.வீதி முடங்கியது!



யாழ்ப்பாணம், ஜூன் 23

வடமராட்சியின் பருத்தித் துறை எரிபொருள் நிரப்பு நிலை யங்கள் மக்களால் முற்றுகையி டப்பட்டு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

கடந்த சில நாட்களாக எரி பொருளுக்காகக் காத்திருக்கும் மக்களுக்கு எரிபொருள் கிடைக்காமையால் ஆத்திர மடைந்த மக்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களை முற்று கையிட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பருத் தித்துறை-யாழ்ப்பாணம் பிரதான வீதி ஊடான போக்குவரத்து ஒரு மணி நேரத்துக்கும் மேலாக துண்டிக்கப்பட்டது. (அ-2)

# மின்சார சபை பொறியியலாளர்களின் வேலை நிறுத்தத்துக்கு தடை உத்தரவு!

கொழும்பு, ஜூன் 23

பொதுமக்களுக்கான மின் சார விநியோகத்துக்கு இடை யூறு விளைவிக்கும் வகையில் வேலைநிறுத்தம் மற்றும் தொழிற்சங்க நடவடிக்கை களில் ஈடுபடுவதற்கு தடை விதித்து இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கத் துக்கு பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவு ஜுலை 06 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையி னால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடு நேற்று மீள விசா ரணைக்கு எடுத்துக் கொள் ளப்பட்டபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு மாவட்ட நீதிபதி பூர்ணிமா பரணகம இந்த உத்த ரவை பிறப்பித்துள்ளார்.

மேலும், இந்த வழக்குக் தொடர்பான ஆட்சேபனை களை ஜுலை 6ஆம் திகதி தாக்கல் செய்யுமாறும் பிரதி வாதிகளுக்கு நீதிபதி உத்தர விட்டார். (அ)

# சக்கோட்டையிலிருந்து தொழிலுக்குச் சென்ற 4 மீனவர்கள் இதுவரை கரை திரும்பவில்லை!

யாழ்ப்பாணம், ஜூன் 23

வடமராட்சி சக்கோட்டை யிலிருந்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கடற்றொ ழிலுக்குச் சென்ற 4 மீனவர்கள் இதுவரை கரை திரும்பாததால் அப்பகுதியில் பதற்றம் ஏற் பட்டது.

நேற்று முன்தினம் பிற்பகல் கடலுக்குச் சென்று நேற்று முற் பகல் 10 மணியளவில் கரை திரும்பவேண்டியவர்கள் இது வரை கரை திரும்பாததால் உற வினர்கள் மற்றும் பிரதேச மக் கள் மத்தியில் அச்சம் ஏற்பட் டுள்ளது.

கடற்படைக்கு அறிவிக்கப் பட்டு அவர்கள் ஊடாக தேடு வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பிரதி நிதிகள் தெரிவித்தனர்.

எரிபொருள் இல்லாததால் தாம் அவர்களை தேடமுடியாத நிலையில் உள்ளதாகவும் பிர தேச தகவல்கள் தெரிவித்தன. (அ-2)

# குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 5000 ரூபா!

கொழும்பு, ஜூன் 23

பொருளாதார நெருக்கடிக ளுக்கு முகங்கொடுத்து வரும் குடும்பங்களுக்கு இந்த மாதம் முதல் 5 ஆயிரம் ரூபா உதவி தொகை வழங்கப்படும் என பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு தெரிவித்துள்ளது.

பொருளாதார ரீதியாக கஷ்டங்களுக்கு உள்ளாகியுள்ள 33 லட்சம் குடும்பங்களுக்கு இந்த உதவி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கி, ஆசிய அபிவி ருத்தி ஆகியன இதற்கான நிதி யுதவிகளை வழங்கியுள்ளதாக பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளர் நீல் பண்டார கூறினார். ஆறு மாதங்களுக்கு இந்த உதவி தொகை வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# அடிக்கடி ஏற்பட்ட அமைதியின்மைக்கு மத்தியில் நேற்று நெல்லியடியில் எரிபொருள் விநியோகம்!

வடமராட்சி, ஜூன் 22

நேற்றுமுன் தினம் அதி காலை முதல் நெல்லியடியில் காத்திருந்த மக்களுக்கு பிற்பகல் நான்கு மணிக்கு எரிபொருள் தாங்கி வந்த பின்னர் எரி பொருள் வழங்கப்பட்டது.

அங்கு அடிக்கடி அமைதி இன்மை ஏற்பட்டுக்கொண் டிருந்த நிலையிலும் நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி தலைமையில் நெல்லி யடி பொலிஸாரின் ஒழுங்க மைப்பிலேயே பெற்றோல் விநியோகம் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் பிற்பகல் 3:45 மணிக்கு எரிபொருள் தாங்கி வந்தவேளை அங்கு கூடியிருந்த சிலரால் தேங்காய் உடைத்து வரவேற்கப்பட்டது.

இதேவேளை, கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கரவெட்டி பிர தேசத்துக்கு உட்பட்டவர்க ளுக்கு மட்டுமே பெற்றோல் விநியோகிக்கப்பட்டது.

இதேவேளை, கல்வி பொது தராதர சாதாரண தரப் பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டுப் பணி யில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு எனப் எரிபொருள் விநியோகம்




பிறிதொரு வரிசையில் வழங் கப்பட்ட நிலையில் அதில் வினாத்தாள் மதிப்பீட்டில் ஈடுபடாத கரவெட்டி பிரதேச செயலக உத்தியோகத்தர் உட் பட பலருக்கும் எரிபொருள் விநியோகம் செய்யப்பட்டதை யடுத்து அங்கு கூடியிருந்த இளைஞர்களால் நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரிக்கு சுட்டிக்காட்டப் பட்டது.

உடனடியாகவே பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டாளர் கள் தவிர்ந்தவர்களுக்கு பெற் றோல் வழங்குவது நிறுத்தப் பட்டது.

இதேவேளை, நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரின் உறவினர் ஒருவரது மோட்டார் சைக்கிளுக்கு முழு மையாக எரிபொருள் வழங்கப் பட்டதாக அங்கிருந்தவர்களால் பகிரங்க குற்றச்சாட்டு வைக்கப் பட்டது.

நேற்றைய எரிபொருள் நிரப் பும் பணி நெல்லியடி பொலி ஸாரின் கட்டுப்பாட்டிலேயே இடம்பெற்றது.

அரச உத்தியோகத்தர் மற் றும் அத்தியாவசிய சேவை களுக்காக குறைந்தது ஆயிரம் லீற்றர் எரிபொருள் இருப்பு வைத்து எரிபொருள் வழங்கப் பட்ட நிலையிலும் அரச உத்தி யோகத்தர்கள் குறுக்கு வழிகளில் எரிபொருள் நிரப்ப முற்பட் டமை குறிப்பிடதக்கது.(அ-02)

# யாழ். மீனவப் பிரதிநிதிகள் கனேடிய தூதுவருடன் பேச்சு

யாழ்ப்பாணம், ஜூன் 23

இலங்கைக்கான கனேடிய நாட்டுத் தூதுவர் டேவிட் மக் கினன் டேவிட் நேற்று யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனப் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடினார்.

யாழ். நகரிலுள்ள தனியார் விடுதியொன்றில் நேற்று காலை 10 மணியளவில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் யாழ். மாவட்ட கடற்றொழிலா ளர் கூட்டுறவுச் சங்கச் சமாசங்க ளின் சம்மேளனத் தலைவர் அ.அன்னராசா, செயலாளர் நா.வர்ணகுலசிங்கம் உள்ளிட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டர்.

இந்த சந்திப்பின்போது வடக்கு கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பாக கலந்துரையாடப் பட்டது.

அத்துடன் நவீன மீன்பிடி முறைமை மற்றும் கடற்றொ ழில் உபகரணங்கள் தொடர் பாக நாம் கோரிக்கைகளை முன்வைத்தபோது கனேடிய நாட்டுத் தூதுவர் சாதகமாக பரி சீலிப்பதாக தெரிவித்தது டன் சந்திப்பு மிகவும் ஆக்க பூர்வ மாக அமைந்தது என கடற்றொ ழிலாளர்களின் பிரதிநிதிகள் சந்திப் புக்கு பின்னர் ஊட கங்களுக்கு கருத்து தெரிவித் தனர். (அ)

# வடக்கு-கிழக்கு போதைப்பொருள் விநியோகத்தில் இராணுவத்துக்கும் பொலிஸாருக்கும் பெரும் பங்கு

## சிறிதரன் எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன் 23

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போதைப்பொருள் விநியோகத் தில் இராணுவத்தினரதும், பொலிஸாரினதும் பங்களிப்பு உள்ளது. தமிழ் இளைஞர்கள் திட்டமிட்ட வகையில் போதைப் பொருள் பாவ னைக்கு அடிமையாக்கப்படுகின்றார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் குற் றஞ்சாட்டினார்.**

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சுகாதார நெருக் கடிகள் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரே ரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ் வாறு குற்றஞ்சாட்டிய அவர், மேலும் கூறுகையில்-

நாட்டின் மொத்த இராணு வத்தினரது எண்ணிக்கையில் 70 சதவீதமானோர் வடக்கு மற் றும் கிழக்கு மாகாணங்களில் உள்ளனர். பொலிஸாரும் ஆயிரக்கணக்கில் உள்ளனர். இருப்பினும் போதைப்பொருள் வியாபாரம் மற்றும் பாவனை கட்டுக்கடங்காமல் சென்று கொண்டிருக்கின்றது.

வடக்கு, கிழக்கில் போதைப் பொருள் விநியோகத்தில் இரா ணுவத்தினரதும், பொலிஸா ரினதும் பங்களிப்பு உள்ளது. வடக்கு, கிழக்கு தமிழ் இளை ஞர்கள் திட்டமிட்ட வகையில் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாக் கப்படுகின்றார் கள்.

இவ்வாறான போதைப் பொருள் அடிமைகளால் வடக்கு, கிழக்கு மக்கள் அச்சத்துடன் வாழ்கின்றார்கள். ஆகவே, இவ்வாறான சுகாதாரச் சீர்கேட்டை தடுக்கும் வகையில் ஒரு தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்-என்றார். (அ)

## மல்லாவி எரிபொருள் நிலையத்தில் குழப்பம்!

முல்லைத்தீவு, ஜூன் 23

துணுக்காய் பல நோக்கு கூட்டுறவு சங்க எரிபொருள் நிரப்பும் நிலையமான மல்லாவி எரிபொருள் நிரப்பும் நிலையத் தில் துணுக்காய் பல நோக்கு கூட்டுறவுச் சங்க பாரவூர்தி ஒன்றில் கொண்டு வரப்பட்ட இரு பரல்களில் நேற்றுக் காலை பெற்றோல் அடிக் கப்பட்டபோது அங்கு மக்கள் சூழ்ந்து பாரவூர்தியை முற்று கையிட்ட நிலையில் எரி பொருள் நிலையச் சூழலில் பெரும் குழப்ப நிலை உரு வாகியது.

இவ்வாறு பரல்களில் பெற்றோல் எங்கு கொண்டு செல்லப்படுகிறது என்றும் அத்தியாவசிய சேவைகளுக்கு கூட எரிபொருள் இல்லை என தெரிவிக்கப்பட்ட நிலையில் குறித்த பெற்றோல் எங்கிருந்து வந்தது எனவும் மக்கள் கேள்வி எழுப்பினர்.

குறித்த சம்பவத்தால் அந்த பகுதியில் பதற்ற நிலை காணப் பட்டதுடன், பொலிஸ் மற்றும் ராணுவத்தினர் குவிக்கப்பட் டனர்.

இதேவளை குறித்த பகுதிக்கு துணுக்காய் பிரதேச செயலா ளர் மற்றும் துணுக்காய் பல நோக்கு கூட்டுறவு சங்க போது முகாமையாளர் மற்றும் தலை வர் ஆகியோர் வருகை தந்தி ருந்தனர்.

இதேவேளை, துணுக்காய் பலநோக்கு கூட்டுறவு சங்கத் திற்கு சொந்தமான எரிபொ ருளை ஏற்றிய பார ஊர்தி மக்களின் குழப்பநிலையினை அடுத்து மல்லாவி பொலிஸா ரினால் பொலிஸ் நிலையத் திற்கு கொண்டு செல்லப்பட்ட துடன் மக்களுடன் பிரதேச செயலாளர் கலந்துரையா டினார்.

பிரதேச செயலாளருடன் கலந்துரையாடிய மக்கள் மல் லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றையும் பதிவு செய்தனர். (அ)

## மின்னல் தாக்கி 30 மாடுகள் பலி!

மட்டக்களப்பு, ஜூன் 23

மட்டக்களப்பு மாவட்டத் தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தௌவு ளானை மேய்ச்சல் தரையில் நேற்று முன் தினம் மாலை மின்னல் தாக்கம் காரணமாக 30 மாடுகள் ஒரே தடவையில் உயிரிழந்துள்ளன.

நேற்று மாலை மட்டக் களப்பு மாவட்டத்தின் பல் வேறு பகுதிகளிலும் அதிகளவு மின்னல் தாக்கங்களும் ஒரு சில பகுதிகளில் மழையும் ஏற்பட் டிருந்தது.

இந்த நிலையில் மட்டக் களப்பு-அம்பாறை எல்லைப் பகுதியான தௌவுளானை மேய்ச்சல் தரை பகுதியில் மரங்களின் கீழ் நின்ற 30மாடு கள் மின்னல் தாக்கத்தினால் உயிரிழந்துள்ளன.

குறித்த மேய்ச்சல் தரைப் பகுதியில் மாடுகளை மேய்க் கும் இரண்டு கால் நடை பண் ணையாளர்களின் மாடுகளே இவ்வாறு உயிரிழந்துள்ளன.

இது தொடர்பில் போர தீவுப்பற்று பிரதேச செயலகம் மற்றும் கால்நடை திணைக் களம் ஆகியவற்றின் கவனத் துக்கு கொண்டு செல்லப்பட் டுள்ளதாக கால்நடை பண்ணை யாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மிகவும் கஸ்டமான சூழ் நிலையிலும் அன்றாடம் தொழிலுக்காக கொண்டுசெல் லப்பட்ட மாடுகள் உயிரிழந் துள்ளதன் காரணமாக பல இலட்சம் ரூபா நஷ்டம் கால் நடை பண்ணையாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது. (அ)

## மூதூர் வைத்தியசாலை சமூகம் எரிபொருள் கோரி போராட்டம்!

திருமலை, ஜூன் 23

திருகோணமலை மூதூர் தள வைத்தியசாலையில் கடமை யாற்றும் வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள், சுகாதாரப் பணியாளர்கள் ஒன்றிணைந்து மூதூர் பிரதான வீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத் துக்கு முன்னால் நேற்று கவன யீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டனர்.

மூதூர் தள வைத்தியசாலை யிலிருந்து நடைபவனியாக எரிபொருள் நிரப்பு நிலையம் வரை சென்று அங்கு கவன யீர்ப்புப் போராட்டம் முன் னெடுக்கப்பட்டது.

இதன் காரணமாக மூதூர் தள வைத்தியசாலையின் செயற் பாடுகள் காலை 7 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை தடைப் பட்டிருந்தது.

இதனால் வைத்திய சேவை பெறுவதற்காக வருகை தந்த நோயாளர்கள் பெரும் அசௌ கரியங்களை எதிர்நோக்கியிருந் தனர்.




"மூதூர் தள வைத்தியசாலை யின் வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள், சுகாதார ஊழியர்கள் ஆகியோர் மூதூர் எரிபொருள் நிரப்பு நிலையத் துக்கு எரிபொருள் நிரப்புவ தற்குச் சென்றால் எங்களை எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் கவனத்தில்கொள் வதில்லை. முன்னுரிமைப் படுத்தி எங்களுக்கு எரிபொ ருளை வழங்குவதில்லை. இத னால் அசௌகரியங்களுக்கு உள்ளாகுகின்றோம். இதற்குத் தீர்வைப் பெற்றுத் தருமாறு வலியுறுத்தியே இந்தக் கவன யீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன் னெடுத்தோம்" - என்று போராட் டக்காரர்கள் தெரிவித்தனர்.

தாம் மக்களுக்கு வழங்கும் சேவை தொடர்பாகவும், தமது செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்தால் மக்கள் எதிர் நோக்க வேண்டி வரும் சிரமங் கள் தொடர்பாகவும் அவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இதையடுத்து ஆர்ப்பாட் டம் இடம்பெற்ற இடத்துக்கு மூதூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான பிரதான எரிபொருள் நிரப்பு நிலையத்தின் தலைவர் வி.எம். நஹீப் வருகை தந்தார்.

வாரத்தில் ஒருநாள் மூதூர் தள வைத்தியசாலை உத்தியோ கத்தர்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கான ஏற்பாடுக ளைச் செய்வதாக ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டவர்களிடம் அவர் வாக்குறுதி வழங்கியதை யடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அவ்விடத்தி லிருந்து கலைந்து சென்றனர். (அ)

## ஜோன்ஸ்டனுக்கு பிணை

கொழும்பு, ஜூன் 23

பாராளுமன்ற உறுப்பினர் ஜொன்ஸ்டன் பெர்னான்டோவுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

காலி முகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது மேற்கொள்ளப் பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் அவருக்கு இவ்வாறு கோட்டை நீதவான் நீதிமன்றத்தினால் பிணை வழங்கப்பட்டுள்ளது. (அ)

## மின் துண்டிப்பு நேரத்தில் வயர்களை வெட்டி விற்ற 3 பேர் யாழில் சிக்கினர்!

யாழ்ப்பாணம், ஜூன் 23

வடமராட்சி கிழக்கு பகுதி யில் மின்சாரம் துண்டிக்கப் பட்ட வேளையில் மின் தட மின் வயர்களை வெட்டி விற்ற மூவர் கைது செய்யப்பட்டுள் ளனர்.

அதேவேளை குறித்த சம்ப வத்துடன் மின்சார சபை ஊழி யர் ஒருவர் தொடர்புபட்டுள்ள தாகவும் அவரை கைது செய்வ தற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சி குடாரப்பு பகுதியில் மின் தட வழியில் சென்ற மின் வயர்கள் வெட்டப் பட்டு களவாடப்பட்டது. இது தொடர்பில் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்யப்பட்டது.

அது தொடர்பில் விசார ணைகளை முன்னெடுத்த பொலிஸார் ஆழியவளை பகுதி யில் உள்ள பண்ணை ஒன்றுக்கு திருடப்பட்ட மின் வயர்கள் 2 இலட்ச ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டமை தொடர்பில் அறிந்து கொண்டனர்.

அதனை அடுத்து பண்ணை உரிமையாளருக்கு எதிராக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் அவரின் வாக்கு மூலத்தின் அடிப்படையில் மூவரை கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை 2 இலட்ச ரூபாய்க்கு விற்பனை செய்யப் பட்ட வயரின் பெறுமதி சுமார் 10 இலட்ச ரூபாய் என தெரிவிக்கப்படுகிறது. (அ)

# தமிழ்நாடு, கேரளாவில் தனிக்கவனம் செலுத்தும் ராகுல்!

**“எனது தந்தை உயிர் விட்ட மண் தமிழ்நாடு. அந்த வகையில் எனக்கு ரத்தம் கொடுத்த தந்தையின் ரத்தம் தமிழ்நாட்டு மண்ணில் உள்ளதால் எனக்கு தமிழ்நாடு பிடிக்கும்.”**



இந்திய அரசியலில் தவிர்க்க முடியாத மற்றும் ஆதிக்கம் செலுத்தி வரும் அரசியல் சக்தியாக ஜவாஹர்லால் நேரு-இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி, சோனியா காந்தி என வழி, வழியாக ஒரு அரசியல் குடும்பம் கோலோச்சி வருகிறது. அந்த குடும்பத்தின் நான்காம் தலைமுறை தலைவராக விளங்கி வரும் ராகுல் காந்திக்கு கடந்த ஜூன் 19ஆம் தேதி பிறந்த நாள். ஆனால், 137 ஆண்டுகள் பழம் பெரும் இந்த கட்சியின் முழு நேர தலைமை பதவியில் அதிகபட்சமாக பதினெட்டரை மாதங்கள் மட்டுமே அவரால் வகிக்க முடிந்தது. இருந்த போதும், அந்த கட்சியின் அசைக்க முடியாத தலைவராகவும் தேசிய அரசியலில் தற்போது தவிர்க்க முடியாதவராகவும் ராகுல் காந்தி பரிணமிக்க அவர் கொண்டிருக்கும் தெற்கு நோக்கிய அரசியல் பார்வை உதவி வருகிறது.

2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடந்த நாடாளுமன்ற கூட்டத்தொடரின்போது அவர் குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது பேசினார். அப்போது தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட்ட நீட் விலக்கு மசோதா குறித்தும் பாஜகவால் தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வர முடியாது என்றும் பேசி அனைவரது கவனத்தையும் ஈர்த்தார்.

“தமிழ்நாடு பற்றி இப்போதெல்லாம் அதிகமாக பேசுகிறீர்களே, ஏன்?” என்று அவைக்கு வெளியே வந்த ராகுல் காந்தியிடம் நிருபர்கள் கேட்டபோது, “நானும் தமிழன்தான்” என்று அவர் அளித்த பதில் பலரையும் வியப்பில் ஆழ்த்தியது. சில நாட்கள் கழித்து தமது “பதில்“ பற்றி ராகுல் காந்தியே விளக்கம் அளித்தார்.



### தமிழ்நாடு மீது தனி பாசம் ஏன்?

“எனது தந்தை உயிர் விட்ட மண் தமிழ்நாடு. அந்த வகை யில் எனக்கு ரத்தம் கொடுத்த தந்தை யின் ரத்தம் தமிழ்நாட்டு மண்ணில் உள்ளதால் எனக்கு தமிழ்நாடு பிடிக்கும். அந்த மாநிலத்துக்கும் எனக்கும் இடையிலான உறவை பிரிக்க முடியாது,” என்று ராகுல் காந்தி கூறினார்.

ஓர் அரசியல்வாதியாக ராகுல் காந்தி இப்படி பேசுவது வியப்பு தராவிட்டாலும், அவர் வெளிப்படையாக பேசுவதை வரவேற்க வேண்டும் என்கிறார் காங்கிரஸ் கட்சி தலைமையகம் தொடர்பான செய்திகளை கடந்த 20 ஆண்டுகளாக சேகரித்து வரும் இவர் நியூஸ்18 தொலைக்காட்சியின் அரசியல் ஆசிரியர் பல்லவி கோஷ்.

ராகுலின் தமிழ்நாடு பாசம் குறித்து விவரிக்கும் மாணிக்கம் தாகூர் எம்.பி, “தமிழ்நாட்டில் இருப்பவர்கள் இயல்பாக பழகக் கூடியவர்கள். தமிழர்களிடம் செயற்கைத்தனமோ போலித்தனமான அன்போ இருக்காது என்று நம்புபவர் ராகுல்,” என்கிறார்.

ராகுலின் பலமும் பலவீனமும் என்ன என்று கேட்டதற்கு, “எந்த விஷயமாக இருந்தாலும் அதை மேம்போக்காகக் கேட்காமல் அதிக சிரத்தையுடன் எதிரே பேசுபவரின் கருத்துக்களைக் கேட்பது ராகுலின் பலம்,” என்கிறார் மாணிக்கம் தாகூர்.

“நெஞ்சில் பட்டதை நேர்படப் பேசுவது ராகுலின் பலவீனம். அவருக்கு ஒருவரையோ, ஒருவர் பேசும் விஷயமோ பிடிக்கவில்லை என்றால் அதை நேரடியாகவே கூறி விடுவார். சாதாரண அரசியல்வாதிகள் போல ராகுலுக்குப் பொய் சொல்லத் தெரியாது. நடிக்கத் தெரியாது,” என்கிறார் அவர்.

ராகுல் காந்தி, தமிழ்நாடு, கேரளா ஆகிய மாநிலங்களில் மக்களோடு மக்களாக பழக பல முயற்சிகளை எடுத்து வருகிறார். கேரள மாநிலம் கொல்லத்தில் மீனவர்களுடன் காலை வேளையில் மீன்பிடித்தது, தமிழ்நாட்டில் வில்லேஜ் குக்கிங் என்ற யூடியூப் சேனல் குழுவினருடன் சேர்ந்து உணவு சாப்பிட்டது, பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளுடன் கலந்துரையாடியது என பல வகைகளில் மக்களை கவர ராகுல் முற்பட்டிருப்பது வரவேற்புக்குரிய விஷயம்தான். ஆனாலும், அரசியலில் அவர் சாதிக்க இன்னும் பல ஆக்கபூர்வ களப்பணிகளை ராகுல் செய்ய முயற்சிக்க வேண்டும் என்கிறார் குபேந்திரன்.

“ராகுல் காந்தியை ஒரு தனி நபராக நீண்ட காலமாக அறிந்திருக்கிறோம். அவரைப் பற்றி பொதுமக்கள் நெருக்கமாக தெரிந்து கொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது,” என்று தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியின் காங்கிரஸ் தலைவர் தினேஷ் குண்டுராவ் தெரிவித்தார்.

தெற்கு நோக்கிய ராகுலின் அரசியல், தனிப்பட்ட முறையில் அவருக்கு உதவினாலும், அந்த அரசியல் வெற்றி பெற அந்தந்த மாநிலத்தில் உள்ள பெரிய கட்சிகளுடன்தானே காங் கிரஸ் கைகோர்த்துச் செயல் பட வேண்டியுள்ளது. அப்படி யென்றால் காங்கிரஸால் தனித்து வளர முடியாதா என்று மாணிக்கம் தாகூரிடம் கேட்டோம்.

“இந்த எண்ணத்தை ராகுலும் கொண்டிருக்கிறார். அவரைப் பொறுத்தவரையும் காங்கிரஸாரைப் பொருத்தவரையும் காங்கிரசுக்கு என தனி அடையாளம் உள்ளது. எப்படி திமுக வுக்கு திராவிட மாடல் அரசியல் என்ற அடையாளம் உள்ளதோ அதுபோல காங்கிரசுக்கு இந்திய தேசியம் என்ற அடையாளம் உள்ளது. அதை விட்டு, விட்டு அரசியல் செய்வதோ சமரசம் செய்வதோ கூடாது என்று சமீபத்தில் கூட அவர் எங்களிடம் வலியுறுத்தினார்,” என்கிறார் மாணிக்கம் தாகூர்.

137 ஆண்டுகள் பழமையான கட்சியை மறுசீரமைப்பதும், அதில் தலைமையை ஏற்றுக் கொள்ளும் பக்குவத்துக்கு அனைவரையும் தயார்படுத்துவதும் இரண்டு வரலாற்று ரீதியிலான நாடாளுமன்ற தேர்தல் தோல்விகளுக்குப் பிறகு 2024இல் வரவுள்ள தேர்தலில் கட்சியின் வெற்றிக்கு சரியான உத்தியை வகுப்பது என்பதுதான் காந்தியின் முன் உள்ள மிகப்பெரிய சவால்.

### ராகுலின் மனமாற்றமும் அனுபவமும்

இந்த சவாலை ராகுலால் சமாளிக்க முடியும் என்பதை விட அவரிடம் காணப்படும் மனமாற்றம் அவ ருக்கு சாதகமான முடி வைத் தரலாம் என்கிறார் மூத்த பத்திரிகையாளர் பல்லவி கோஷ்.

“15 ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் பார்த்த ராகுல் வேறு. இப்போது பார்ப்பவர் வேறு. இப்போது அவர் பழுத்த அனுபவத்தை பெற்று விட்டார். தெற்கு நோக்கிய அவரது பார்வைக்கு உதாரணமாக அவர் அடிக்கடி தென் மாநிலங்களைச் சேர்ந்த பத்திரிகையாளர்களுடன் கலந்துரையாடி மாநில நிகழ்வுகளை அறிந்து கொள்ள ஆர்வம் காட்டுகிறார். அவரது அரசியல் பின்புலமாக இருப்பவர்களை எடுத் துக் கொண்டால் அது கே.சி. வேணு கோபால், மாணிக்கம் தாகூர், சிறினிவாஸ் ஆக உள்ளனர். இவர்கள் எல்லோரும் தென் மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். அந்த வகையில் தமது அரசியல் வாழ்க்கை பலப்பட தென் மாநிலங்கள் முக்கியம் என்பதை ராகுல் உணர்ந்திருக்கிறார்,” என்று பல்லவி கூறினார்.



தேசிய அரசியல் மட்டுமின்றி கேரளாவில் மாநில அரசியல் விவகாரங்களுக்காகவும் குரல் கொடுக்கத் தொடங்கியிருக்கிறார் ராகுல் காந்தி. அங்கு முதல்வர் பினராயி விஜயன் தலைமையிலான சிபிஐ-எம் தலைமையிலான இடது ஜனநாயக முன்னணி அரசாங்கம் ஊழலில் ஈடுபடுவதாகவும், குறிப்பாக தங்கக் கடத்தல் மற்றும் மாநில அரசுப் பணியாளர் தேர்வில் முறைகேடுகள் நடப்பதாகவும் ராகுல் தொடர்ந்து குற்றம்சாட்டி வருவது அந்த மாநில அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. இரு தென் மாநிலங்களுக்கும் ராகுல் அடிக்கடி சென்று வருவதால், தலைவரின் புதிய அடையாளத்தை பதிவு செய்யும் முகமாகவும் அவரது அரசியலை பார்க்கலாம் என்கிறார் குபேந்திரன்.

தமிழ்நாடு மற்றும் கேரளாவில் காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வந்தால், தற்போது பஞ்சாப், ராஜஸ்தான், சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களில் மட்டும் ஆட்சி செய்து, மகாராஷ்டிரா, ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களில் ஆட்சியைப் பகிர்ந்து கொள்ளும் பெரும் பழமையான கட்சிக்கு அது பெரும் மன உறுதியை அளிக்கும். ஆனால், தமிழ்நாட்டில் தற்போதுள்ள சூழலில், திமுகவுடன் கைகோர்த்து காங்கிரஸ் நடத்தும் அரசியலை பார்த்தால் அதற்கான வாய்ப்பு குறைவாகவே உள்ளது என்கிறார் அவர்.

### புதிய உத்தி பலன் தருமா?

ஆனால், காங்கிரஸாருக்கு ஆறுதல் தரும் வகையில் 2019இல் “இந்தியா டுடே“ நடத்திய ஆய்வில், தமிழ்நாடு மற்றும் கேரளாவில் இந்தியாவின் பிரதமர் வேட்பாளராக ராகுல் காந்தி விரும்பப்படுகிறார் என்று கண்டறியப்பட்ட போது, திமுக-காங்கிரஸ் கூட்டணி தமிழகத்தில் மொத்தம் உள்ள 39 இடங்களில் தேர்தல் நடந்த 38 இடங்களில் 37 இடங்களைக் கைப்பற்றி மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற்றது. கேரளாவில் மொத்தமுள்ள 20 மக்களவைத் தொகுதிகளில் 19 இடங்களில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி வெற்றி பெற்றது. இந்த வெற்றிகள் ராகுல் தீவிர கவனம் செலுத்தி வரும் தமிழ்நாடு, கேரளாவில் தொடர அவரது அரசியல் உத்திகள் கைகொடுக்கலாம்.

2019இல் நடந்த தேர்தல் வெற்றிக்கு தமிழ்நாடு, கேரளாவில் இருந்த பாஜகவுக்கு எதிரான உணர்வு காரணமாக இருந்தாலும், மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இருந்த வாக்காளர்களின் எதிர்ப்பு மனநிலை, 2024இல் நடக்கவிருக்கும் தேர்தல் வரை நீடிக்குமா என்று உறுதியாக கூற முடியாது என்கிறார் குபேந்திரன்.

இதே கருத்தை வலியுறுத்தும் பல்லவி கோஷ், “ராகுலின் புதிய அடையாளம், அரசியல் உத்தி எல்லாம் அவருடைய செல்வாக்கு உயர உதவலாம். ஆனால், கட்சியின் முழு நேர தலைவராக அவர் இப்போது இல்லை.

ஆனால், கட்சியின் எல்லாமுமாக அவரே விளங்குகிறார். முக்கிய முடிவுகளை எடுக்கிறார். இது ஆரோக்கியமான அரசியலுக்கு அழகானதாக தோன்றவில்லை. அடிப்படையில் இதை ராகுல் சரிப்படுத்திக் கொண்டு தீவிர அரசியலில் கவனம் செலுத்துவதே அவருக்கு நல்லது,” என்கிறார்.




# முழு உலகையும் அச்சுறுத்தும் உயர்ந்து வரும் பணவீக்கம்!

இலங்கையின் பொருளாதார நிலைமை உலகம் அறிந்ததுதான். ஆனாலும் அதன் பணவிக்கம் தொடர்சியாக மழலழயத் தொடும் அளவிற்கு உயர்ந்து கொண்டு சொல்கின்றது.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மூலம் கணக்கிடப்பட்ட மே மாதத்துக்கான பணவீக்கம் 45.3வீதமாக அதிகரித்துள்ளது என்று தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம் அறிக்கையிட்டுள்ளது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணுக்கு அமைய 2022 மார்ச் மாதம் 21.5வீதமாக இருந்த பணவீக்கம் 2022 ஏப்ரலில் 33.8வீதமாக அதிகரித்திருந்த நிலையில் மே மாதத்தில் 45.3வீதமாக அதிகரித்துள்ளது.

இதேவேளை, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின்படி, உணவுப் பணவீக்கம் 58 சதவீதமாகவும், உணவு அல்லாத பிரிவின் வருடாந்த பணவீக்கம் 34.2 சதவீதமாகவும் காணப்படுவதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ளள இந்த பணவிக்க அதிகரிப்பு இன்னமும் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே செல்லும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வேளையில் பணவீக்கம் என்பது இலங்கையை மாத்திரமல்ல, முழு உலகையுமே அச்சுறுத்திவரும் நெருக கடியாக மாறியிருக்கின்றது. இது குறித்து தமிழக தினசரியான திணமணி எழுதியுள்ள ஆசிரியத் தலையங்கத்தை கீழே தருகின்றோம்.

மிகப் பெரிய பொருளாதார மந்தநிலையை நோக்கி உலகம் நகர்ந்து கொண்டிருக்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து கொண்டிருக்கும் கோவிட் 19 கொள்ளை நோய்த்தொற்றும், அதை எதிர்கொள்ள கையாண்ட நடவடிக்கைகளும் ஒட்டுமொத்த உலகப் பொருளாதாரத்தை புரட்டிப்போட்டிருக்கின்றன. போதாக்குறைக்கு உக்ரைன் - ரஷ்ய போர், நிலைமையை மேலும் மோசமாக்கி இருக்கிறது.

இதுபோன்ற பொருளாதார மந்தநிலையை உலகம் சந்திப்பது புதிதொன்றுமல்ல. முதலாவது உலகப் போருக்குப் பிறகு 1918-இல் தொடங்கிய மந்தநிலை, 1920, 1921 ஆண்டுகளில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியது. 1918 ஸ்பேனிஷ் காய்ச்சல் என்கிற கொள்ளை நோய்த் தொற்றும் சேர்ந்துகொண்டபோது ஒட்டுமொத்த உலக பொருளாதாரமும் தடம்புரண்டதில் வியப்பில்லை.

கடந்த 70 ஆண்டுகளில் உலகம் இதற்கு முன்பு நான்கு பொருளாதார மந்தநிலைகளை எதிர்கொண்டிருக்கிறது. 1975, 1982, 1991, 2009-ஆம் ஆண்டுகளில் இதேபோல விலைவாசியும், வேலைவாய்ப்பின்மையும் அதிகரித்து உற்பத்திக்கு ஏற்ப விற்பனை இல்லாத மந்தநிலை காணப்பட்டது. இப்போது 2022-இல் கச்சா எண்ணெய் விலையில் தொடங்கி, எல்லா அத்தியாவசியத் தேவைகளும் அதிகரித்திருக்கின்றன. மேலும் அதிகரிக்கக் கூடிய நிலைமை பரவலாகக் காணப்படுகிறது.

அமெரிக்கா உள்பட வல்லரசு நாடுகள் அனைத்துமே கடுமையான பொருளாதாரப் பின்னடைவைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றன. உயர்ந்து வரும் பணவீக்கம் என்கிற அசுரனின் தாக்குதல்தான் முக்கியக் காரணம். அமெரிக்க அரசின் புள்ளிவிவரப்படி, கடந்த ஒரு தலைமுறையில் எதிர்கொள்ளாத அளவில் பணவீக்கம் 8.6 வீதம் அதிகரித்திருக்கின்றது. குடியிருப்புகள், உணவுப் பொருள்கள், விமானக் கட்டணம், புதிய - பழைய வாகனங்கள் என்று அனைத் துப் பிரிவிலும் அதிகரித்த விலை வாசியை அமெரிக்கக் குடிமகன் எதிர் கொள்ள நேர்ந்திருக்கிறது.

பணவீக்கத்தை எதிர்த்துப் போராடுவதற்கு, உலகளாவிய மத்திய வங்கிகள் வட்டி விகிதங்களை கடந்த மே மாதம் முதல் உயர்த்தத் தொடங்கியுள்ளன. இந்த நடவடிக்கை மிகவும் தாமதமானது என்று வல்லுநர்கள் கருதினாலும், இப்போது இந்த நடவடிக்கையை எடுக்காவிட்டால், நிலைமை மிகவும் விபரீதத்துக்கு இட்டுச் செல்லும் என்கிற கட்டாயத்தால்தான் அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

பொருளாதார மந்த நிலையை உலகம் சந்திப்பது புதிதொன்றுமல்ல. முதலாவது உலகப் போருக்குப் பிறகு 1918-இல் தொடங்கிய மந்தநிலை, 1920, 1921 ஆண்டுகளில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியது. 1918 ஸ்பேனிஷ் காய்ச்சல் என்கிற கொள்ளை நோய்த் தொற்றும் சேர்ந்து கொண்டபோது ஒட்டு மொத்த உலக பொருளாதாரமும் தடம்புரண்டதில் வியப்பில்லை.



உலகளாவிய அளவில் காணப்படும் பொருளாதார மந்தநிலையும், விலைவாசி ஏற்றமும், பணவீக்கமும் இந்தியாவையும் பாதிக்காமல் இல்லை. ஏனைய வல்லரசு நாடுகளையும் வளர்ச்சி அடையும் நாடுகளையும் ஒப்பிடும் போது மிகச் சாதுரியமாக நிலைமை கையாளப்படுகிறது என்பதை மறுப்பதற்கில்லை. குறிப்பாக, ரஷியாவுடனான கச்சா எண்ணெய் ஒப்பந்தமும், ரூபாய் - ரூபிள் வர்த்தகச் செலாவணியும் இந்தியப் பொருளாதாரம் சீர்குலைந்து விடாமல் காப்பாற்ற உதவியிருக்கின்றன.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் விதமாக இந்திய ரிசர்வ் வங்கி, கடந்த சில தினங்களுக்கு முன்பு, வங்கிகளுக்கு வழங்கப்படும் குறுகிய காலக் கடன்களுக்கான வட்டி விகித்தை அடுத்தடுத்த வாரங்களில் 0.50 வீதம் மற்றும் 0.40 வீதம் என மொத்தம் 0.90 வீதம் உயர்த் தியுள்ளது. வங்கிக் கடன் பெற்றவர்கள், தவணைத் தொகை அதிகரிப்பால் பாதிக்கக்கூடும்.

கடந்த புதன்கிழமை அமெரிக்க மத்திய வங்கியான பெடரல் ரிசர்வ், 75 புள்ளிகள் அல்லது 0.75 வீத வட்டி விகிதத்தை உயர்த்தி இந்தியாவுடன் இணைந்து கொண்டது. இதைத் தொடர்ந்து, ஐரோப்பிய பிராந்தி யத்திலும் பிரிட்டன், சுவிட்சர்லாந்து உள்ளிட்ட பல நாடுகள் வங்கி வட்டி விகிதத்தை உயர்த்தத் தொடங்கி விட்டன் அல்லது தொடங்கக் காத்தி ருக்கின்றன.

பணவீக்கத்துக்கு எதிரான இந்தப் போராட்டம், இத்தகைய ஒருங்கிணைந்த மற்றும் ஆக்ரோஷமான கொள்கை முடிவுகள் வெற்றியைத் தருமா என்பது கேள்வி அல்ல.

ஆனால், அது மேலும் சிக்கலை ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும் என்பதே கவலை. வளர்ச்சி அடைந்த மேலைநாடு களில், கடந்த இரண்டு ஆண்டுகளில் மேற்கொள்ளப் பட்ட நிதி ஊக்குவிப்பு நடவடிக்கைகள் தொடருமா என்பது சந்தேகம். அமெரிக்க மத்திய வங்கியின் அளவுக் கதிகமான வட்டி விகித உயர்வுகள், “ரிஸஷன்” என்று சொல்லப்படும் பொருளாதார மந்த நிலைக்கான அறிகுறியாகத் தெரிகிறது.

அமெரிக்க மத்திய வங்கி அதன் கொள்கை விகிதம் 2022-க்குள் 3.5 வீதம்-ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கிறது, இது மார்ச் மாத மதிப்பீட்டை விட 1.5 வீதம் அதிகமாகும். ஆனால், இந்திய ரிசர்வ் வங்கி அத்தகைய கொள்கை விகிதங்களைத் தெளிவு படுத்தவில்லை.


டந்த மாதம் வட்டி விகிதங்களை சரியான நேரத்தில் உயர்த்தியது. வட்டி விகித உயர்வு என்பது பொருளாதார வளர்ச்சியை மீட்டெடுப்பதற்கான கூர்மையானஆயுதமாக இருக்க வேண்டும். அதே நேரத்தில், பொருளாதார மந்தநிலை காலத்தில் மக்களுக்கு பாரமாகவும் இருந்துவிடக்கூடாது.

பணவீக்கம், வேலைவாய்ப்பின்மை உள்ளிட்ட பல சவால்களுக்கு இடையேயும் இந்தியப் பொருளாதாரம் மந்த நிலைக்குத் தள்ளப்படவில்லை என்கிற அளவில் நாம் ஆறுதல் அடைய லாம். கடந்த நிதியாண்டின் கடைசி காலாண்டில் சற்று பின்தங் கினாலும் கூட, 2021-22-இல் அதி விரைவில் வளரும் பொருளாதாரமாக இந்தியா தொடர்கிறது. சாதகமான பருவ மழையும் அதிகரித்த ஏற்றுமதியும் உதவுமானால், தற்போதைய பணவீக்கப் பிரச்னையை பின்னுக்குத் தள்ளி கட்டுக்குள் கொண்டுவந்துவிட முடியும்.

(தினமணி)


# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தான்

18) 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

19)  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

.............................................

20) தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122 , 124 , 126 , ............. , ...........    ii) 18 , 15 , 12 , ............. , ...........

21) [ 3, 9, 14, 6, 10, 12, ] பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

.....................................................................

22) ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

.........................................................................................

23) ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

..................................................................

24) பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

..................................................................

25) 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ..................................................

26) **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |

27) கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.......................................................

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



......................................................

29) ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

......................................................    (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)     2)     3) 

31) வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி    2) இரணைமடுக்குளம்    3) பராக்கிரமபாகு சமுத்திரம்

32) உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்    2) உதிப்பு    3) உடலைத் தளர்த்தல்

33) தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்    2) வாளேந்திய சிங்கம்    3) நெற்கதிர்

34) பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976    2) 1851    3) 1815

35) வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு    2) இறப்பர், தாழம்பூ    3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6    2) 8    **19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130    2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745    **23.** 455
**24.** 1l 100ml / 1100ml    **25.** ரூபாய் 144.00
**26.** 1) 190    2) 100    3) 290
**27.** 15 : 30    **28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1    **31.** 2    **32.** 3
**33.** 2    **34.** 3    **35.** 2

### கல்வி tv CHANNEL-1 — 23.06.2022 வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி tv CHANNEL - 2 — 23.06.2022 வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



# 145 லீற்றர் பெற்றோலுடன் ஏறாவூரில் ஒருவர் கைது!

ஏறாவூர், ஜூன் 23

ஏறாவூர் - கொம்மாந்துறை பிரதான வீதியிலுள்ள சில்லறை கடை ஒன்றில் சட்டவிரோத மாக பெற்றோல் விற்பனை செய்த ஒருவரை 145 லீற்றர் பெற் றோலுடன் நேற்று முன்தினம் பொலிஸார் கைது செய்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், ஏறாவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹரிச டி சில்வாவின் ஆலோசனைக்க மைய சிறு குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி உதவி பரி சோதகர்வை.விஜயராஜா தலை மையிலான குழுவினர் நேற்று முன்தினம் குறித்த கடையை சுற்றிவளைத்னர்.

இதன்போது சிவில் உடையில் பொலிஸ் உத்தியோ கத்தர் குறித்த கடைக்கு சென்று பெற்றோல் வாங்குவது போல நடடித்து பெற்றோலை வாங் கிய நிலையில் சுற்றிவளைத்தி ருந்த பொலிஸார், உடனடியாக கடையை முற்றுகையிட்டு சோதனையிட்டனர். இதன் போது, கடையின் பின் பகுதி யில் கலன்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 145 லீற்றர் பெற்றோலை மீட்டதுடன் கடை உரிமையாளரையும் கைது செய்தனர்.

கைதான நபர் நேற்று ஏறாவூர் சுற்றுலா நீதிமன் றத்தில் முற்படுத்தப்பட்டார். அவரின் உடைமையிலிருந்த பெற்றோலை பறிமுதல் செய்த நீதிமன்றம் அவருக்கு 5 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்தது. (ஐ)

# வைக்கோல்பட்டறை நாய் மாதிரி கூட்டமைப்பு செயல்படுகின்றது!

## ஒலுவிலில் அமைச்சர் டக்ளஸ் சாடல்!

ஒலுவில், ஜூன் 23

தமிழ் தேசிய கூட்டமைப் பினர் வைக்கோல் பட்டறை நாய் மாதிரி, அதாவது தாங் களும் செய்ய மாட்டார்கள். செய்பவர்களையும் விடமாட் டார்கள். எனவே நான் கொண்டு வருகின்ற திட்டங்கள் யாவும் மக்கள் நலன் சார்ந்ததாகும் என கடற்றொழில் வள அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அம்பாறை - ஒலுவில் துறை முகத்தை அபிவிருத்தி செய்து மக்கள் பாவனைக்கு உட்படுத் துவது தொடர்பில் நேற்று நேரில் பார்வையிட்டபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

ஒலுவில் துறைமுகத்தை அபிவிருத்தி செய்து மக்கள் பாவனைக்கு உட்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப் பட்டுள்ளது. மக்களின் வாழ்வா தாரத்தை வளப்படுத்தி கட்டி யெழுப்புவதற்கு பல வேலைத் திட்டங்கள் உள்ளன.இந்த மாவட்டத்தின் மக்களுக்கு தான் முன்னுரிமை வழங்கப் படும். தமிழ் தேசிய கூட்டமைப்பினர் வைக்கோல் பட்டறை நாய் மாதிரி, அதா



வது தாங்களும் செய்ய மாட டார்கள். செய்பவர்களையும் விடமாட்டார்கள்.

கடந்த 2008ஆம் ஆண்டில் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக் கப்பட்ட ஒலுவில் மீன்பிடித் துறைமுகம் 2013 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதியும் துறைமுக அமைச்சருமான மகிந்த ராஜபக்ஷவால் 2013 ஆம் ஆண்டு திறந்துவைக்கப் பட்டது. ஆனால் ஒரு வர்த்தக கப்பல்கூட ஒலுவில் துறை முகத்துக்கு இதுவரை வரவே இல்லை. ஏனெனில், மணல் நிரம்புவதால் இதுவரை எவ்வித பயனையும் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

இதன் பிரகாரம் ஒலுவில் மீன்பிடி துறைமுகத்தின் செயல்பாடுகளை சம்பிரதாய பூர்வமாக மீள ஆரம்பிப் பதற்கும் குறித்த துறைமுகத் திற்கு மறைந்த முன்னாள் அமைச்சர் எம்.எச்.எம் அஸ்ரப் பின் பெயரை வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக குறிப்பிட்டார். எனவே, இவ் விடயத்தில் வீணான அரசியல் செய்யாமல் அனைத்து தரப்பி னரும் முன்வந்து ஒத்துழைப்பு களை வழங்கவேண்டும் என கேட்டுக்கொண்டார். (ஐ-1)

# கன்று ஈனும் நிலையிலிருந்த மாட்டை சாதுரியமாக காப்பாற்றிய ரயில் சாரதி

மட்டக்களப்பு, ஜூன் 23

தண்டவாளத்தின நடுவே செய்வதறியாது நின்றிருந்த கன்றுஈனும் நிலையிலிருந்த மாடொன்றை, ரயில் சாரதி மிகவும் சாதுரிய மாக காப் பாற்றிய சம்பவமொன்று இடம்பெற் றுள்ளது.

மட்டக்களப்பு - பொல நறுவை ரயில் தண்டவாளத்தில், வெலிகந்தைக்கும் அசல புரைக்கும் இடையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாகோவிலிருந்து மட்டக் களப்பு நோக்கி நேற்று காலை பயணித்தபோது, ரயில் அசல புர - வெலிகந்தை பகுதியில், கன்று ஈனும் நிலையில் மாடொன்று நின்றுகொண்டி ருந்துள்ளது.

ஹோரன் ஒலி எழுப்பியும் மாடு அசைய வில்லை. இந் நிலையில், சாதுரியமாக செயல் பட்ட சாரதி ஏ. எச். எம். சீ. பீ. தீகல, ரயிலை நிறுத்தினார். இதன் பின்னர், ரயிலின் தலைமை காவலர் ஏ.ஜீஎம்.சமீர தலைமையிலான காவலர்கள், ரயிலில் இருந்து இறங்கி குறித்த மாட்டைத் தண்டவாளத்திருந்து அகற்றினர்.

சாரதி மற்றும் காவலர்களின் செயல்பாட் டால், மாடு மற்றும் குட்டியின் உயிர் காப் பாற்றப்பட்டுள்ளது என பாதுகாப்பு அதிகாரி எசார் மீரா சாஹிபு தெரிவித்தார்.

குறித்த மனிதாபிமான மிக்க செயலைப் புரிந்த சாரதியை, ரயில் நிலைய அதிபரும் பிரதேச மக்களும் பாராட்டினர். (ஐ)

# கிளிநொச்சி இளைஞர் மட்டக்களப்பில் மீட்பு!

மட்டக்களப்பு, ஜூன் 23

கிளிநொச்சியில் காணாமல் போன இளைஞர் ஒருவர், மட் டக்களப்பு - கொக்கட்டிச் சோலையில் கண்டுபிடிக்கப்பட் டார்.

கிளிநொச்சி, கனகாம்பிகை குளம் பகுதியைச் சேர்ந்த இளை ஞரை கடந்த 16 ஆம் திகதி காணவில்லை என்று கிளி நொச்சி பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

குறித்த இளைஞன் தொழில் பயிற்சி நிலையம் ஒன்றுக்கு சென்றிருந்த நிலையிலேயே காணாமல் போயிருந்தார் என்றும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் குறித்த இளைஞன் மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலையில் அப்பகுதி இராணுவத்தினரால் அடையாளம் காணப்பட்டு கண்டுபிடிக்கப்பட்டார்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் அவரின் காதலி யுடன் அவர் தங்கியிருந்துள் ளார் என்று தெரிய வந்துள்ளது.

இந்த விடயம் குறித்து கொக்கட்டிச்சோலை பொலி ஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)



# நீண்டநாட்களுக்குப் பின்னர் மட்டக்களப்பில் டீசல் விநியோகம்!

மட்டக்களப்பு, ஜூன் 23

மட்டக்களப்பு மாவட்டத் தில் நீண்ட நாட்களுக்குப் பின் னர் நேற்று டீசில் விநியோகம் இடம்பெற்றது.

தாளங்குடா ஐ. ஓ. சி. மற் றும் ஆரையம்பதி சிபெற்கோ ஆகிய எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாகவே இந்த டீசல் விநியோகிக்கப்பட்டது.

சுமார் ஒரு கிலோ மீற்றருக் கும் அதிகமான தூரத்தில் மிக நீண்ட வரிசையில் வாகனங்களு டன் மக்கள் காத்திருந்து டீச லைப் பெற்றுச் சென்றனர். (ஐ)

# ஈஸ்டர் தாக்குதலில் கைதான 51 பேருக்கும் விளக்கமறியல்!

மட்டக்களப்பு, ஜூன் 23

ஈஸ்டர் தாக்குதல் தொடர பாக காத்தான்குடி பிரதேசத் தில் கைது செய்யப்பட்ட சஹ் ரானின் பயிற்சி முகாமில் பயற்சிபெற்ற மற்றும் அவரு டன் தொடர்பை பேணி வந்தது தொடர்பாக சந்தேகத்தில் கைதாகி தடுத்து வைக்கப்பட்ட 51 பேரையும் எதிர்வரும் ஜூ லை 5 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு மட்டக் களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

இதில் சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர், ஆகி யோரின் வழக்குகள் நீதிவான் நீதிமன்றில் இருந்து உயர் நீதி மன்றத்துக்கு மாற்றப்பட்டது டன் 5 பேர் வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டனர். அத்துடன், 15 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அடுத்து 51 பேர் தொடர்ந்தும் நாட்டி லுள்ள பொலநறுவை, அநுராத புரம், கேகாலை, பதுளை, திரு கோணமலை போன்ற சிறைச் சாலைகளில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

இந்த நிலையில் மட்டக் களப்பு நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப் பட்டபோது நாட்டில் பல வேறு சிறைச்சாலைகளில் உள்ளவர்களை தற்போதைய நாட்டின் எரிபொருள் தட்டுப் பாட்டால் நீதிமன்றுக்கு அழைத்துவரவில்லை.

எனினும், மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிலர் பலத்த பாதுகாப்புடன் அழைத்துவரப் பட்டு நீதிமன்றில் முற்படுத்தப் பட்டனர். இதையடுத்து, வழக்கை விசாரித்த 51 பேரை யும் எதிர்வரும் 5 திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)





# ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கம் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலி

காபூல், ஜூன் 23

ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நில நடுக்கத்தால் நேற்றிரவு வரை பலியானோர் எண்ணிக்கை 1,000 ஆக அதிகரித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் நேற்று புதன்கிழமை காலை சக்தி வாய்ந்த நில நடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.1 ஆக பதிவானது.

பாகிஸ்தான் எல்லைக்கு அருகில் உள்ள கோஸ்ட் நகரிலிருந்து சுமார் 44 கிமீ (27 மைல்) தொலைவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தின் பாதிப்புகளால் 1000 பேர் வரை பலியாகினர் என்றும் 1,500 பேர் வரை காயமடைந்தனர எனவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிழக்கு பகுதியான பக்டிகா மாகாணத்தில்தான் பெரும்பாலான உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த மாகாணத்தில் மட்டும் 250இற்கும் அதிகமானவர்கள் பலியாகினர் என்று தகவல்கள் கூறுகின்றன.

இந்த நிலநடுக்கத்தால் 1000இற்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்துள்ளன. மீட்புப் பணிகள் மற்றும் மருத்துவ வசதிகளை தலிபான் அரசு முடுக்கி விட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் நிலநடுக்கத்தால் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி இம்ரான் கான் இரங்கல் தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் அரசு ஆப்கானிஸ்தானுக்கு உதவ வேண்டும் என்று அவர் வலியிறுத்தியுள்ளார்.

ஆப்கானில் கடந்த ஜனவரி மாதம் ஏற்பட்ட நில நடுக்கத்தில் 20இற்கும் அதிகமானோர் பலியானது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இந்தியா - இங்கிலாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்

இந்தியா - இங்கிலாந்து தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தம் குறித்து பிரித்தானியப் பிரதமர் பொறிஸ் ஜோன்சன் பாராட்டியுள்ளதுடன் அதன் முக்கியத்துவம் குறித்தும் வலியுறுத்தியுள்ளார்.

பிரெக்ஸிட்டுக்குப் பிந்தைய சூழலில் புது டெல்லியுடன் முன்மொழியப்பட்ட வர்த்தக ஒப்பந்தமானது மிகவும் முக்கியமானதொன்றென அவர் அறிவித்துள்ளார்.

ருவாண்டா தலைநகர் கிகாலியில் பொதுநலவாய அரச தலைவர்கள் கூட்டத்தின் தொடக்கத்தைக் குறிக்கும் வகையில் ஜான்சன் வெளியிட்ட அறிக்கையில் இந்த ஒப்பந்தம் குறித்து குறிப்பிட்டுள்ளார்.

54 உறுப்பினர்களைக் கொண்ட பொதுநலவாய அமைப்பின் அனைத்து நாடுகளுக்கும் மகத்தான மதிப்பளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

துவாலுவின் பசிபிக் தீவுக்கூட்டம் (மக்கள் தொகை 11,000) இந்தியாவின் அதே அட்டவணையில் இருக்கும் (மக்கள் தொகை 1.3 பில்லியன்). இருப்பினும், நமக்கு இடையே உள்ள அனைத்து வேறுபாடுகளுக்கும், பகிரப்பட்ட மதிப்புகள், வரலாறு இவை அனைத்திலுமாக இணைந்துள்ளதாக பிரதமர் ஜான்சன் 'தி டெய்லி டெலிகிராப்' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

'இவை அனைத்தும் பிரிட்டனுக்கு ஒரு தனித்துவமான வாய்ப்பை உருவாக்குகின்றன. இதன் மூலம் உண்மையான மற்றும் அளவிடப்பட்ட வர்த்தக நன்மையுடன் பரந்த மற்றும் வேகமாக வளர்ந்து வரும் சந்தைகளை பொதுநலவாய நாடுகளுக்கிடையில் ஒருங்கிணைக்கிறது.

அதனால்தான் நாங்கள் சுதந்திர வர்த்தகம் அல்லது பொருளாதார கூட்டாண்மையில் கையெழுத்திட ஆர்வத்துடன் உள்ளோம். முடிந்தவரை பல பொதுநலவாய நாடுகளுடன் ஒப்பந்தங்கள் முன்னெடுக்கப்படும்.

ஏப்ரல் மாதம் இந்தியாவிற்கு விஜயம் செய்த போது பிரதமர் நரேந்திர மோடியுடன் முன்னெடுக்கப்பட்ட இரு தரப்பு பேச்சுகளில் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தம் குறித்து விரிவாக கலந்துரையாடினார் என்றும் பொறிஸ் ஜோன்சன் கூறியுள்ளார். (ஐ)



## சிங்கப்பூர், தென்கொரியாவுக்கும் பரவியது குரங்கு அம்மை தொற்று

சியோல், ஜூன் 23

சிங்கப்பூர் மற்றும் தென்கொரியாவில் முதல் குரங்கு அம்மை பாதிப்பு பதிவாகியுள்ளமை அந்நாட்டினரிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

உலகம் முழுவதும் குரங்கு அம்மை நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2,580-ஆக

உயர்ந்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

குறிப்பாக ஆபிரிக்காவுக்கு வெளியே 42 நாடுகளில் குரங்கு அம்மை நோய் கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில் சிங்கப்பூர் மற்றும் தென்கொரியாவில் குரங்கு அம்மை நோய் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. பிரிட்டனிலிருந்து சிங்கப்பூர் வந்த 42 வயதானவருக்கு குரங்கு அம்மை

தொற்று அறிகுறிகள் கண்டறியப்பட்ட நிலையில் தற்போது அவருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதேபோல் ஜேர்மனியிலிருந்து தென்கொரியா திரும்பிய நபருக்கும் குரங்கு அம்மை பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஐ)

## பிரிட்டினில் 30 ஆண்டு இல்லாதளவு ரயில் ஊழியர்கள் வேலை நிறுத்தம்

லண்டன், ஜூன் 23

பிரித்தானியாவில் கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத மிகப்பெரிய புகையிரத ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுப்பட்டனர்.

லண்டன் போன்ற நகரங்களில் உள்ள ரயில் நிலையங்கள்,சுரங்க ரயில் நிலையங்கள் வழக்கமாக மக்கள் கடல் போல் காட்சியளிக்கும்.

40,000 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுப்பட்டனர்.

இந்த வேலை நிறுத்தத்தால் பொதுமக்கள், ரயில் பயணிகளிடையே கடும் குழப்பம் நீடிக்கிறது.

பஸ் தரிப்பிடங்களில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். வாடகைக் கார்களுக்கும் கடும் தட்டுப்பாடு நிலவியது.

புகையிரத சங்கத்தினர் ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

## 2989 கோடி ரூபாயை உக்ரைன் சிறுவர்க்காக வழங்கிய ரஷ்யர்

மொஸ்கோ, ஜூன் 23

ரஷ்யாவை சேர்ந்த டிமித்ரி முரடோவ் (60) என்பவர் நோவாயாகாஸிடா என்ற பத்திரிகையின் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். பல்வேறு தொலைக்காட்சிகளில் நிகழ்ச்சி தொகுப்பாளராகவும் இவர் பணியாற்றியுள்ளார்.

இந்நிலையில் இவருக்கு கடந்த 2021ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. அப்போது அவருக்குக் கிடைத்த நோபல் பரிசுத் தொகையான சுமார் இலங்கை மதிப்பில் 14 கோடி ரூபாயை மொஸ்கோவில் முதுகெலும்பு பிரச்னையால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளின் மருத்துவ செலவுக்காக வழங்கினார்.

இதனிடையே உக்ரைன் மீதான ரஷ்ய தாக்குதலால் பொதுமக்கள் பலர் உயிரிழந்தனர். குறிப்பாக பல குழந்தைகள் தங்கள் பெற்றோரை இழந்துள்ளனர். இந்த குழந்தைகளுக்கு உதவும் வகையில் தனக்கு வழங்கப்பட்ட நோபல் தங்க பதக்கத்தை ஏலம் விடப்போவதாக கடந்த மார்ச் மாதம் முரடோவ் அறிவித்தார்.



இந்நிலையில், அமெரிக்காவின் நியூயோர்க் மாகாணத்தில் ஹெரிடேஜ் என்கிற நிறுவனம் அவருடைய பதக்கத்தை ஏலம் விட்டது. இதில் அவருடைய நோபல் பதக்கம் 103 மில்லியன் டொலருக்கு (இலங்கை மதிப்பில் ரூ. 2989 கோடி) ஏலம் போனது. அத்தொகை முழுவதையும் உக்ரைனில் போரில் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு வழங்குவதாக டிமித்ரி முரடோவ் அறிவித்துள்ளார்.

இந்தத் தொகையை ஐக்கிய நாடுகள் அவையின் மனிதாபிமான நிறுவனமான ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்துக்கு டிமித்ரி முரடோவ் வழங்கியுள்ளார். (ஐ)

## ஆஸியுடனான தொடரை வென்று:

# 30 வருடங்களின் பின்னர் இலங்கை புதிய சாதனை!




கொழும்பு, ஜூன் 23

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான ஒருநாள் தொடரை இலங்கை அணி வென்று மகத்தான சாதனை படைத்துள்ளது. தாயக மண்ணில் 30 வருடங்களுக்கு பின்னர் தொடர்ச்சியாக மூன்று போட்டிகளில் வென்றதன் மூலம் இலங்கை அணி தனது புதிய எழுச்சியை நிகழ்த்தியுள்ளது.

இலங்கை வந்துள்ள ஆஸி. அணிக்கு எதிரான நான்காவது ஒருநாள் போட்டி கொழும்பு ஆர். பிரேமதாஸ விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி முதலில் இலங்கையை துடுப்பெடுத்தாட அழைத்தது.

இதன்படி, துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி அவுஸ்திரேலிய அணிக்கு 259 ஓட்டங்களை நிர்ணயித்தது.

இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு மஹீஷ் தீக்ஷனவும் சாமிக கருணாரட்னவும் பெரும் அச்சுறுத்தலாக அமைந்தனர்.

டேவிட் வோர்ணர் நிலைத்து - அதிரடியாக ஆடினாலும், ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடனேயே ஆட்டமிழந்தனர்.

அரோன் பின்ஞ் ஓட்டம் எதையும் பெறாமல் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த மிற்செல் மார்ஷ் நிதானித்து ஆடினாலும், 26 ஓடட்டங்களுடன் அவரும் வெளியேறினார். பின்னர் வந்த லபுசாக்னே 14, அலெக்ஸ் காரி 19, ட்ராவிஸ் ஹெட், மக்ஸ்வெல் 1 என ஆட்டமிழந்தனர்.

12 பௌண்ட்ரிகளுடன் சதத்தை எட்டிய டேவிட் வோர்ணர் ஓர் ஓட்டத்தால் அதைத் தவற விட்டு, 99 ஓட் டங்களுடன் ஆட்டமிழந்தார். பின்னர் வந்தவர்களில் பட் கம்மின்ஸ் மட்டுமே போராடி 35 ஓட்டங்களை எடுத்தார்.

இறுதியில், அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்கள் நிறை வில் 254 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்து 4 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

சாமிக கருணாரத்ன, தனஞ்சய டி சில்வா, ஜெப்ரி வொண்டர்ஸே தலா 2 விக்கெட்களையும், மஹீஸ் தீக்ஷன, வனிந்து ஹசரங்க, துனித் வெல்லாலகே ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

முன்னதாக துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு தொடக்கம் கொடுத்த நிரோஷன் டிக்வெல்ல 1, பதும் நிஸங்க 13, குசல் மெண்டிஸ் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த தனஞ்சய டி சில்வா, சரித் அசலங்க ஆகியோர் அபாரமான இணைப் பாட்டத்தை ஏற்படுத்தினர்.

இருவரும் இணைப்பாட்டமாக 101 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், தனஞ்சய டி சில்வா 7 பௌண்ட்ரிகளுடன் 60 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

எனினும், மறுமுனையில் சரித் அசலங்க நிதானமாக தனது ஆட்டத்தை வெளிப்படுத்தினார். எனினும், அவருக்கு நிலையான இணைப்பாட்ட வீரர் ஒருவர் கிடைக்கவில்லை. தசூன் சானக 4, துனித் வெல்லாலகே 19, சாமிக கருணாரத்ன 7 என ஆட்டமிழந்தனர். 9ஆவது வீரராக களமிறங்கிய வனிந்து ஹசரங்க ஓரளவு நிதானம் காட்டவே, சரித் அசலங்க தனது கன்னிச் சதத்தைப் பதிவு செய்தார்.

தொடர்ந்து அவர் 110 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அவர் 10 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் இந்த ஓட்டங்களைக் குவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அடுத்து வந்த வொன்டர்சே 0, தீக்ஷன 0 என ஆட்டமிழந்த நிலையில், வனிந்து ஹசரங்க 21 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காது இருந்தார்.

இலங்கை அணி 49 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்களையும் இழந்து 258 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஆஸியின் பந்துவீச்சில் மத்தியூ குனமன், பட் கம்மின்ஸ், மிற்செல் மார்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக சரித் அசலங்க தெரிவானார். (ஐ)

# விராட் கோலிக்கு கொரோனா தொற்று

புதுடில்லி, ஜூன் 23

மாலைதீவிலிருந்து திரும்பிய பின்னர் விராட் கோலி கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் செய்துள்ள இந்திய அணி ஒரு டெஸ்ட், 3 ஒருநாள், 3 இருபது -20 தொடர்களில் விளையாடுகிறது.

டெஸ்ட், ஜூலை 1 அன்று தொடங்குகிறது. இதற்காக ரோஹித் சர்மா, விராட் கோலி உள்ளிட்ட அனைத்து இந்திய வீரர்களும் இங்கிலாந்துக்கு சென்று பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

ஐ. பி. எல். போட்டி முடிந்த பிறகு தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான இருபது - 20 தொடரில் விராட் கோலி பங்கேற்கவில்லை.

மனைவி அனுஷ்கா சர்மாவுடன் இணைந்து மாலத்தீவில் விடுமுறையைக் கழித்தார். அங்கிருந்து இந்தியாவுக்குத் திரும்பிய பிறகு லண்டன் சென்ற விராட் கோலி கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகின.

எனினும் கொரோனாவிலிருந்து மீண்டுவிட்டதால் இந்திய அணியினருடன் அவர் தொடர்ந்து பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார். இதனால் நாளை தொடங்கும் பயிற்சி ஆட்டத்திலும் பின்னர் நடக்கும் டெஸ்ட்




போட்டியிலும் அவர் விளையாடுவதில் எவ்விதச் சிக்கலும் ஏற்படாது எனக் கூறப்பட்டது. (ஐ)




# இலங்கை வருகிறது பாகிஸ்தான் அணி!

கொழும்பு, ஜூன் 23

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் அணியுடனான போட்டிகள் குறித்த பட்டியலை இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

ஜூலை மாதம் இலங்கை வரும் பாகிஸ்தான் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. இதற்காக, பாகிஸ்தான் அணி ஜூலை 6, ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாகிஸ்தான் அணி இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்ட நிலையில் தற்போது மீண்டும் இலங்கைக்கு வருகின்றது.

இந்த போட்டி ஐ.சி.சி. ஆண்கள் உலக டெஸ்ட் சம்பியன் ஷிப் போட்டித் தொடருடன் இணைந்த தொடராக இது உள்ளது.

இந்நிலையில் முதல் டெஸ்ட் போட்டி ஜூலை16 ஆம் திகதி ஆரம்பமாகி 20 ஆம் திகதி வரை காலியில் இடம்பெறவுள்ளது. 2 ஆவது டெஸ்ட் போட்டி ஜூலை 24 ஆம் திகதி ஆரம்பமாகி 28 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது. (ஐ)

# இங்கிலாந்து அணியில் அண்டர்சன் நீக்கம்!




லண்டன், ஜூன் 23

நியூசிலாந்து - இங்கிலாந்து அணிகள் மோதும் மூன்றாவது டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பமாகிறது. இந்தப் போட்டியில் இங்கிலாந்து அணியில் ஜேமஸ் அண்டர்சன் நீக்கப்பட்டுள்ளார். அவருக்கு பதிலாக ஜெமி ஓவர்ரன் அறிமுகமாகிறார்.

கடந்த வாரம் நடந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணியை 5 விக்கெட்களால் வெற்றி கொண்டிருந்தது இங்கிலாந்து. இந்நிலையில், மூன்றாவது போட்டியையும் வெல்லும் நோக்கிலேயே இந்த மாற்றத்தை செய்துள்ளதாக அணித் தலைவர் பென் ஸ்ரோக்ஸ் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் அண்டர்சன் 11 விக்கெட்களை கைப்பற்றியிருந்தார். ஆனாலும், ஜெமி ஓவர்ரன்னை அவருக்குப் பதிலாகக் களமிறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அணி விவரம்:

அலெக்ஸ் லீஸ், சாக் கிராலி, ஒல்லி பொப், ஜோ ரூட், ஜொனி பெயர்ஸ்ரோ, பென் ஸ்ரோக்ஸ் (அணித் தலைவர்), பென் போக்ஸ், ஜெமி ஓவர்ரன், ஸ்ரூவர்ட் பிரொட், மேட் பட்ஸ், ஜாக் லீச். (ஐ)

# நாணய நிதியத்தையே நம்பியுள்ளோம்!

## இதுதான் இறுதி நிலைமை என்கிறார் ரணில்!

கொழும்பு, ஜூன் 23

சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடல்களை மேற்கொள்வதே இப்போது எம்முன் உள்ள ஒரே பாதுகாப்பான தெரிவாகும். உண்மையில், இது எங்கள் ஒரே விருப்பம். இந்த பாதையை நாம் எடுக்கவேண்டும். நாணய நிதியத்துடன் கலந்துரையாடி கூடுதல் கடன் வசதியைப் பெறுவதற்கான ஒப்பந்தத்தை எட்டுவதே எங்கள் நோக்கம் - என்று தெரிவித்துள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

நேற்று அவர் பாராளுமன்றில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இந்த அரசாங்கம் பொறுப்பேற்றதிலிருந்து இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை, நாடு எதிர்நோக்கும் உண்மையான நிலைமை மற்றும் அதனை நிவர்த்தி செய்வதற்கு நாம் எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து உங்களுக்குத் தெரிவிக்க நடவடிக்கை எடுத்துள்ளேன். இதை சிலர் கிண்டல் செய்துள்ளனர்.

"நாடு எதிர்கொள்ளும் கஷ்டங்களை எங்களிடம் கூறுவதற்காகவே அவர் பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டாரா?" என்று என்னை விமர்சிக்கிறார்கள். எவ்வாறாயினும், நாங்கள் அவர்களிடம் முழு உண்மையையும் கூறுகிறோம் என்பதற்காக இன்னும் பலர் நன்றியுள்ளவர்களாக உள்ளனர். மேலும், இந்த சிக்கல்களை சமாளிக்க எங்களுக்கு உதவும் பல்வேறு திட்டங்களை முன்வைக்க அவர்கள் முன்வந்துள்ளனர்.

இந்த இரு குழுக்களில் நீங்கள் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், இந்த இருண்ட காலத்தைக் காண, ஒரே நாடாக ஒன்றிணைந்து, தேசத்தின் மறுகட்டமைப்புச் செயல்பாட்டில் இணையுமாறு நான் உங்களை அழைக்கிறேன். நாம் அனைவரும் இணைந்து இந்த பயணத்தை மேற்கொள்வோம். இதைச் செய்வதன் மூலம் மட்டுமே நாட்டை மீட்டெடுக்க முடியும்.

எரிபொருள், எரிவாயு, மின்சாரம் மற்றும் உணவுப் பற்றாக்குறைக்கு அப்பால் மிக மோசமான நிலைமையை நாம் இப்போது எதிர்கொண்டுள்ளோம். நமது பொருளாதாரம் முழுமையான சரிவைச் சந்தித்துள்ளது. அதுதான் இன்று நம் முன் உள்ள மிகத் தீவிரமான பிரச்னை. இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுப் பதன் மூலமே இந்தப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண முடியும். இதைச் செய்ய, நாம் எதிர்கொள்ளும் அந்நிய கையிருப்பு நெருக்கடியை முதலில் தீர்க்க வேண்டும்.

முற்றிலும் சரிந்த பொருளாதாரத்தைக் கொண்ட ஒரு நாட்டை, குறிப்பாக ஆபத்தான முறையில் அந்நிய கையிருப்பு குறைவாக உள்ள ஒரு நாட்டை மீட்டெடுப்பது எளிதான காரியமல்ல. ஆரம்பத்தில் பொருளாதாரத்தின் வீழ்ச்சியை மெதுவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தால், இன்று நாம் இந்த கடினமான சூழ்நிலையை எதிர்கொண்டிருக்க முடியாது. ஆனால், இந்த வாய்ப்பை இழந்தோம். மிகக் கீழே விழுந்துவிடக் கூடும் என்பதற்கான அறிகுறிகளை இப்போது காண்கிறோம். இருப்பினும், இந்த சூழ்நிலையிலிருந்து நாம் வெளியே வரவேண்டும். இல்லை என்றால் நாட்டில் வேறு எந்த பிரச்னைக்கும் தீர்வு காண முடியாது.

அமைச்சர் காஞ்சன விஜயசேகர நாட்டின் எரிபொருள் நிலைமை பற்றிய விரிவான தகவல்களை நேற்று (21) முன்வைத்தார்). தற்போது, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 700 மில்லியன் அமெரிக்க டொலர் கடனில் உள்ளது. இதன் விளைவாக, உலகில் எந்த நாடும் அல்லது அமைப்பும் எங்களுக்கு எரிபொருளை வழங்க தயாராக இல்லை. காசுக்கு எரிபொருளைக் கொடுக்கக்கூட தயங்குகிறார்கள்.

நாங்கள் இந்திய கடன் வரியின் கீழ் கடன் பெற்றுள்ளோம். எங்கள் இந்திய சகாக்களிடம் இருந்து கூடுதல் கடன் உதவி கோரினோம். ஆனால் இந்தியாவாலும் இந்த முறையில் தொடர்ந்து எங்களை ஆதரிக்க முடியாது. அவர்களின் உதவிக்குக் கூட எல்லை உண்டு. மறுபுறம், இந்தக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கான திட்டம் நமக்கும் இருக்க வேண்டும். இவை அறக்கொடைகள் அல்ல. அப்படியானால் இந்த இக்கட்டான சூழ்நிலையில் இருந்து விடுபட என்ன வழி?

சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடல்களை மேற்கொள்வதே இப்போது எம்முன் உள்ள ஒரே பாதுகாப்பான தெரிவாகும். உண்மையில், இது எங்கள் ஒரே விருப்பம். இந்த பாதையை நாம் எடுக்கவேண்டும். நாணய நிதியத்துடன் கலந்துரையாடி கூடுதல் கடன் வசதியைப் பெறுவதற்கான ஒப்பந்தத்தை எட்டுவதே எங்கள் நோக்கம்.

அடுத்த கட்டமாக, பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கான அடித்தளத்தை உருவாக்கி, நமது ஏற்றுமதி வருவாயை அதிகரிப்பதற்கான உடனடி வேலைத்திட்டத்தை செயல்படுத்துவோம் என்று நம்புகிறோம். மத்திய வங்கி, திறைசேரி, சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள், தொழில் வல்லுநர்கள் மற்றும் நிபுணர்களுடனான கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்தத் திட்டம் ஏற்கெனவே வகுக்கப்பட்டுள்ளது.

ஒரு சிறந்த தீர்வு கிடைத்தால் எங்களுக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். உண்மையில், நீங்கள் நாட்டிற்கு ஒரு நடைமுறை மற்றும் மிகவும் சாதகமான திட்டத்தை வைத்திருந்தால், அதை முன்வைக்க நாங்கள் உங்களை அழைக்கிறோம். அரசியல் கட்சிகள் விரும்பினால் அவைகளால் முன்வைக்கப்படும் தீர்வுகளை நாம் பாராளுமன்றத்தில் முன்வைக்கலாம். அவர்களுக்கு தேவையான இடத்தையும் வாய்ப்பையும் வழங்க நாங்கள் தயாராக இருக்கிறோம். நாங்கள் தற்போது செயல்படுத்தியுள்ள திட்டத்தை இப்போது விரிவாக உங்களுக்கு முன்வைக்கிறேன்.

வருமானம் மற்றும் வரிவிதிப்பு தொடர்பான சர்வ தேச நாணய நிதியக் குழு கலந்துரையாடலுக்காக இலங்கைக்கு விஜயம் செய்தது. அதற்கான அறிக்கையை எங்களிடம் முன் வைத்தனர். திங்கட்கிழமை, சர்வதேச நாணய நிதியத்தின் பிரதான குழு இலங்கை வந்தடைந்ததுடன், குழுவுடனான பேச்சுவார்த்தை அடுத்த சில நாட்களுக்கு தொடரும்.

நாங்கள் ஆரம்ப விவாதங்களை முடித்துவிட்டோம், பொது நிதி, நிதி, கடன் நிலைத்தன்மை, வங்கித் துறையின் ஸ்திரத்தன்மை மற்றும் சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு போன்ற பல்வேறு துறைகள் பற்றிய கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டோம்.

ஜூலை மாத இறுதிக்குள் நாணய நிதியத்துடன் உத்தியோகபூர்வ அளவிலான ஒப்பந்தத்தில் ஈடுபட உள்ளோம். இங்கு மிக முக்கியமானது நமது கடன் மறுசீரமைப்புத் திட்டம். லாசார்ட் மற்றும் கிளிபோர்ட் சான்ஸ் அணிகளுடன் சேர்ந்து ஜூலை மாத இறுதிக்குள் இந்தத் திட்டத்திற்கான கட்டமைப்பை முடிக்க எங்களால் முடிந்த அனைத்தையும் செய்வோம்.

நாணய நிதியத்தின் ஒப்புதல் முத்திரையைப் பெற்றால், உலகம் மீண்டும் நம்மை நம்பும். உலகின் பிற நாடுகளில் இருந்து கடன் உதவி மற்றும் குறைந்த வட்டியில் கடன்களைப் பெற இது எங்களுக்கு உதவும்.

நாங்கள் தற்போது உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி, அமெரிக்கா, பிற நட்பு நாடுகள் மற்றும் நாட்டுத் தலைவர்களுடன் நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறும் வரை இடைக்கால குறுகிய காலக் கடன்களைப் பெறுவதற்கு விவாதங்களை நடத்தி வருகிறோம்.

இந்தப் பணிகள் வெற்றிகரமாக முடிவடைந்ததைத் தொடர்ந்து பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்கான அடித்தளத்தை நாம் அமைக்க முடியும். ஆனால் இது எந்த வகையிலும் முடிவாக இருக்காது. உண்மையில், இது எங்கள் பயணத்தின் தொடக்கமாக இருக்கும். வலுவான பொருளாதாரத்தை நோக்கிய புதிய பயணம்.

இலங்கையின் புதிய பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் உருவாக்கவும் நாம் எமது திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

முன்னோக்கி செல்லும் பாதைக்கான அடித்தளத்தை உருவாக்க, ஓகஸ்ட் 2022 இல் மீதமுள்ள காலத்திற்கு இடைக்கால பட்ஜெட்டை முன்வைப்போம். 2023ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் நவம்பர் மாதம் தாக்கல் செய்யப்படும்.

இது தவிர, நமது பொருளாதாரத்தை வலுப்படுத்த தேவையான பல புதிய சட்டங்களை பாராளுமன்றத்தில் முன்வைப்போம். பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளுடனும் இவை தொடர்பில் நாம் ஏற்கனவே கலந்துரையாடலை ஆரம்பித்துள்ளோம். நமது தேசத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகளுக்கு உறுதுணையாக இந்தக் கலந்துரையாடல்களில் பங்கேற்கும் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் புத்திஜீவிகளுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் அரசியல் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கும் நாங்கள் பணியாற்றி வருகிறோம். அடுத்த விளைச்சல் பருவத்திற்கு தேவையான உரங்களை விவசாயிகளுக்கு வழங்க ஏற்கெனவே திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

விலைக் கட்டுப்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில் இந்தியக் கடன் வரியின் கீழ் அரிசியை இறக்குமதி செய்வதற்கும் இலங்கைச் சந்தைக்கு இருப்புக்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுப்போம். இதன் மூலம் இலங்கை நுகர்வோருக்கு ஓரளவு நிம்மதி கிடைக்கும்.

நாட்டின் விவசாயத் துறைக்கு புத்துயிர் அளிக்கும் முயற்சிகளுக்காக தனிநபர்கள் மற்றும் குழுக்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகிறேன். அனைத்துக் கட்சிப் பிளவுகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு உணவுப் பாதுகாப்பு தொடர்பான அரசாங்கத்தின் விவாதங்களில் பல குழுக்கள் கலந்துகொள்கின்றன என்பதையும் நான் கவனிக்க விரும்புகிறேன்.

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தத்திற்கு அமைச்சரவை செவ்வாய்கிழமையன்று அங்கிகாரம் வழங்கியது. ஐக்கிய மக்கள் சக்தியினால் முன்வைக்கப்பட்ட 21ஆவது திருத்தத்திற்கான முன்மொழிவுகள் மீதான தீர்மானத்தை உயர்நீதிமன்றம் தற்போது அறிவித்துள்ளது.

அரசாங்கத்தின் முன்மொழிவுக்கு அமைச்சரவை இணக்கம் தெரிவித்துள்ளது. தற்போது முன்வைக்கப்பட்ட பிரேரணைகள் தொடர்பில் இணக்கப்பாட்டுக்கு வந்து இறுதி வரைவு சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும், ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி கட்சி பாராளுமன்றத்தை புறக்கணித்ததன் காரணமாக இந்த செயல்முறை தாமதமானது துரதிர்ஷ்டவசமானது.

நான் முன்பே குறிப்பிட்டது போல், இன்று நாம் எதிர்கொள்ளும் நிலைமை எந்த வகையிலும் சாதாரணமானது அல்ல. இலங்கையின் அண்மைக் காலத்தில் இந்த அளவு நெருக்கடியை சந்திக்கவில்லை என்பதை நான் பலமுறை கூறி வந்துள்ளேன்.

நாங்கள் உறுதியான பொருளாதார அடித்தளத்தை ஏற்படுத்தியவுடன், தேர்தலில் உங்கள் விருப்பப்படி எந்த ஒரு அரசியல் கட்சிக்கும் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு, பொருத்தமான 225 பிரதிநிதிகளை பாராளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கலாம். அதற்கான பொறுப்பும் அதிகாரமும் இந்த நாட்டின் குடிமக்களாகிய உங்களிடமே உள்ளது.

இலங்கை இன்று எதிர்கொள்ளும் இக்கட்டான நிலைக்கு காரணமானவர்கள் என்று நீங்கள் நம்பும் நபர்களை நிராகரிப்பதற்கான வாய்ப்பு அப்போது உங்களுக்கு வழங்கப்படும். இதையொட்டி, புதிய அரசாங்கத்திற்கு பொறுப்பானவர்களை நீதியின் முன் நிறுத்துவதற்கான ஆணை வழங்கப்படும். ஆனால் இவை அனைத்தும் நாட்டின் மறுமலர்ச்சியைத் தொடர்ந்து மட்டுமே அடைய முடியும்.

இதனை மனதில் கொண்டு, இன்று நாட்டை வீழ்ச்சியடைந்துள்ள பாதாளத்தில் இருந்து கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளுக்கு பங்களிக்குமாறு நாட்டு பிரஜைகளுக்கு நான் அழைப்பு விடுக்கின்றேன்.

தற்போது இலங்கைக்கு மாதாந்த எரிபொருள் தேவையை பூர்த்தி செய்ய 550 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுகின்றன. எவ்வாறாயினும், பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள நிலையில், இதற்குத் தேவையான நிதியைப் பெறுவதில் நாங்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகிறோம். இதன் விளைவாக, எங்களின் டொலர் வருமானத்தின் அடிப்படையில் அதிகபட்ச எரிபொருள் இருப்புக்களை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுப்போம். எரிபொருள் பற்றாக்குறையை தீர்க்க அதிக நேரம் எடுக்கும். எனவே எரிபொருளைப் பயன்படுத்தும் போது சிக்கனமாக இருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நெருக்கடியின் விளைவாக நாட்டின் பள்ளிக் கல்வி வீழ்ச்சியடைந்துள்ளது என்பதை நாங்கள் அறிவோம். பிள்ளைகள் பல மாதங்கள் படிப்பை இழந்துள்ளனர். முதலில் கோவிட் தொற்றுநோய் மற்றும் இப்போது பொருளாதார சரிவு காரணமாக. அமைச்சர் சுசில் பிரமஜயந்த மற்றும் அமைச்சின் அதிகாரிகள் நிலைமையை சீர்செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். எரிபொருள் வழங்கும் போது பாடசாலை பஸ்கள் மற்றும் பாடசாலை வாகனங்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு உரிய அதிகாரிகள் திட்டம் வகுத்து வருகின்றனர். இந்நாட்டுப் பிள்ளைகளுக்கு தொடர்ச்சியாகப் படிப்பதற்கு ஏற்ற சூழல் உருவாக்கப்படுவதை உறுதி செய்வோம்.

அனைத்து அரசியல் கட்சிகளுடனும் விவாதிக்க சர்வதேச நாணய நிதியத்தை நான் கேட்டுக் கொண்டேன். இவ்விரு கட்சிகளும் இந்த விவாதங்களில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சிறிது காலத்துக்கு நமது கருத்து வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு, இந்த நேரத்தில் நம் நாட்டைப் பற்றி மட்டும் நினைத்தால், வரவிருக்கும் இந்த பேரழிவிலிருந்து நம் தாய்நாட்டைக் காப்பாற்ற முடியும் என்று நான் நம்புகிறேன் -என்றார். (அ)



# மன்னார் வளைகுடா கடலில் சிக்கியது அரிய வகை மீன்!

மன்னார், ஜூன். 23

மன்னார் வளைகுடா கடல் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த பாம்பன் விசைப்படகு மீனவர்கள் வலையில் அரிய வகை சூரிய மீன் ஒன்று நேற்று புதன்கிழமை காலை சிக்கியது.

மத்திய கடல் மீன் ஆராய்ச்சி விஞ்ஞானிகள் சூரிய மீனை ஆய்வு செய்தனர்.

மன்னார் வளைகுடா கடல் பகுதியில் 104 வகை பவளத் திட்டுகள், 147 வகை கடல் பாசிகள், கடல் புற்கள், கடல் சங்குகள், கடல் ஆமை, கடல் குதிரை, கடல் அட்டை, டால்பின், அணில் மீன், புள்ளி திருக்கை, சூரிய மீன் போன்ற அரிய வகை உயிரினங்கள் உள்ளன. அரிய வகை மீனான சூரிய மீன் பெரும்பாலும் மீனவர்கள் வலையில் சிக்குவது இல்லை.

இந்நிலையில் பாம்பன் தெற்கு மீன்பிடி துறைமுகத்தில் இருந்து மன்னார் வளைகுடா கடல் பகுதியில் மீன் பிடிக்கச் சென்ற விசைப்படகு மீனவர்கள் வலையில் சூரிய மீன் சிக்கியது.

இந்த சூரிய மீன் சிறிய வாய், துடுப்பு போன்ற உடலமைப்பு வால்பகுதி இல்லாமல் காணப்படும்.

பாம்பன் துறைமுகத்திற்கு வந்த இந்த அரிய வகை சூரிய மீனை மண்டபம் மத்திய கடல் ஆராய்ச்சி விஞ்ஞானிகள் ஆய்வு செய்து மீனின் நீளம் அகலம், எடை உள்ளிட்டவைகளை குறித்து கொண்டனர்.

இந்த மீன் அரிய வகை சூரிய மீன் ஆகும். இது அதிகபட்சமாக 4 அரை அடி நீளமும், 2 ஆயிரத்து 300 கிலோ எடை வரையிலும் வளரும் தன்மை உடையது.

ஒரு மணி நேரத்தில் 3.2 கிலோ மீற்றர் வேகத்தில் நீந்தும். இந்த மீன்கள் ஒரு நேரத்தில் 30 கோடி முட்டைகள் இடும். பாம்பன் மீனவர்கள் வலையில் சிக்கிய சூரிய மீன் 55 கிலோ எடை கொண்டது. நான்கு ஆண்டுகளுக்கு பின் பாம்பன் மீனவர்கள் வலையில் சூரிய மீன் சிக்கியுள்ளதாக மத்திய கடல் மீன் ஆராய்ச்சி விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (அ)

## எரிபொருள்...

அந்த அறிக்கையில், மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்படும் சிறிதளவு எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக, மிக நீண்ட நேரம், பல்வேறு அசௌகரியங்களோடு வீதிகளில் நின்று கொண்டிருக்கும் பெரும் எண்ணிக்கையிலான பொது மக்கள் மத்தியில் சில வேளைகளில் முரண்பாடுகளும் சச்சரவுகளும் ஏற்படுவது ஆச்சரியமானது அல்ல.

இந்த நீண்ட வரிசைகளில் ஒழுங்கு முறைகளை மீறி, சமூகப் பொறுப்பற்று செயற்படும் பல நபர்களும் எம் மத்தியில் இருக்கத்தான் செய்கின்றனர். இன்றைய சூழ்நிலையில் சகல எரிபொருள் நிலையங்களும் விநியோக நடவடிக்கைகளை நேர்மையாக மேற்கொள்வதாக கருதமுடியாமலும் உள்ளது. இந்த நிலைமையில் எரிபொருளுக்கான நீண்ட வரிசைகளில் சில சந்தர்ப்பங்களில் ஏற்படும் அமைதியின்மையை கையாள்வதற்கு இராணுவத்தை ஈடுபடுத்தும்போது பிரச்சனை மோசமடைவதையும் கண்மூடித்தனமான பலாத்கார பிரயோகம் அடக்குமுறையாக விஸ்வரூபம் எடுப்பதையும் அவதானிக்க முடிகின்றது. கடந்த 18ம் திகதி முல்லைத்தீவு, விசுவமடுவில் பொதுமக்களுக்கும் இராணுவத்திற்கும் இடையில் ஏற்பட்ட மோதலும், அதை அடுத்து ஏவப்பட்ட அடக்கு முறை அட்டகாசமும் இந்த நெருக்கடியான கால கட்டத்தில் இனிமேலும் நிகழக்கூடாது.

எரிபொருள் விநியோக நடவடிக்கைகளில் இருந்து இராணுவத்தை முற்றாக விலக்கிக் கொள்வதன் மூலமே இதனை உறுதிப்படுத்த முடியும். இந்த நடவடிக்கைகளில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டும் பொறுப்பு பொலீஸ் துறைக்கே உரியது. இதில் இராணுவத் தலையீடு தேவையற்றது. எரிபொருள் விநியோகம் தொடர்பில் இதுவே பொருத்தமான அணுகுமுறை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். எரிபொருள் விநியோக விடயத்தில் சகலரின் ஒத்துழைப்பையும் கோரியுள்ள வடமாகாண ஆளுனர் இதனை கவனத்தில் கொள்ள முன்வர வேண்டும் என விரும்புகின்றோம்.

இன்றைய சூழ்நிலையில் தினமும் பல்வேறு இடர்களுக்கு முகம் கொடுத்து நிற்கும் பொது மக்களுக்கு, அநாவசியமாக மேலதிக துன்பங்களும் ஏற்படுவது தடுக்கப்பட்டேயாக வேண்டும்-என்றுள்ளது. (அ)

## பாராளுமன்றை...

மறை தேர்ந்தெடுக்கவேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கோரிக்கை விடுத்தார். (அ)

## சிங்களத்...

கூறுகையில்-

நாடு பொருளாதார பாதிப்பை எதிர்கொண்டுள்ள வேளை சகல துறைகளின் சேவைகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளன. எரிபொருளின் விலையேற்றம் மற்றும் எரிபொருள் பற்றாக்குறையால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்க்கொண்டுள்ளார்கள். எரிபொருள் வரிசையில் நின்ற பலர் உயிரிழந்துள்ளார்கள். நாட்டின் பொருளாதார நிலைமை மக்களின் சுகாதார நிலைமையைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் விசர் நாய்க் கடிக்கு மருந்து இன்மையால் சிறுவன் உயிரிழந்தார் என்று பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருந்ததை அவதானிக்க முடிந்தது. விசர் நாய்க் கடிக்குள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்றவர்கள் தடுப்பூசி இல்லாத காரணத்தால் சிகிச்சையளிக்கப்படாமல் திருப்பியனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாத்திரமல்ல முழு நாட்டிலும் விசர் நாய்க் கடி மற்றும் பாம்புக் கடிக்கான தடுப்பூசிகளில் தட்டுப்பாடு காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. இந்த நிலைமை தொடர்ந்தால் விசர் நாய்க் கடிக்கு உள்ளாகுபவர்கள் குரைக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள வைத்தியசாலைகளில் பாரிய குறைபாடுகள் காணப்படுகின்றன. தாதியர் சேவை நியமனத்திலும் பாரிய குறைப்பாடுகள் காணப்படுகின்றன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள வைத்தியசாலைகளில் பெருமளவிலான சிங்களவர்கள் தாதியர்களாக நியமிக்கப்படுகின்றார்கள். இதனால் வடக்கு, கிழக்கு வைத்தியசாலைகளில் மொழிப் பிரச்சினை காணப்படுகின்றது.

வடக்கு, கிழக்கு வைத்தியசாலைகளுக்குத் தமிழ்த் தாதியர்களை நியமிக்க வேண்டும். கிளிநொச்சியில் உள்ள வைத்தியசாலைகளில் மருந்துவர்களுக்கான தட்டுப்பாடு தீவிரமடைந்துள்ளது-என்றார். (அ)

# பேருந்திலிருந்து இறங்கி வீதியை கடந்த இராணுவ சிப்பாயை மோதியது பிக்கப்!

வவுனியா, ஜூன். 23

வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் பஸ்ஸில் இருந்து இறங்கி வீதியை கடக்க முற்பட்ட இராணுவ வீரர் மீது பிக்கப் வாகனம் மோதியதில் இராணுவ சிப்பாய் மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற இவ் விபத்து சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

முல்லைத்தீவு பகுதியில் உள்ள இராணுவ முகாம் ஒன்றில் பணியாற்றும் இராணுவ வீரர் ஒருவர் விடுமுறையில் வீடு சென்று இ.போ.சபை பஸ்ஸில் மீண்டும் கடமைக்கு திரும்பிய போது வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் உள்ள இராணுவ முகாமில் ஆவணம் ஒன்றை ஒப்படைப்பதற்காக பேருந்தில் இருந்து இறங்கி வீதியை கடக்க முற்பட்ட போது எதிர் திசையில் வந்த பிக்கப் வாகனம் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து இராணுவ வீரரை மோதியதில் இராணுவவீரர் 7மீற்றர் தூரம் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலை கொண்டு செல்லப்பட்ட போதும் அவர் வைத்தியசாலைக்கு கொண்டு வருவதற்கு முன்னரே இறந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பில் ஈரப்பெரியகுளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சீ.ஐ.சீ.பண்டார தலைமையில் ஈரப்பெரியகுளம் போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி டீ.சீ.எல்.ஜெயவர்த்தன தலைமையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## பௌத்த...

குருந்தூர்மலையில் மட்டும் புத்தர் சிலையை நிறுவி பௌத்தத்தை மீளுருவாக்கம் செய்ய முற்படுவது சிங்களக் குடியேற்றத்துக்கான கால்கோள் ஆகும்." என்றும் குற்றஞ்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரான சரத் வீரசேகர தமிழ் மக்களை எச்சரிக்கும் வகையில் பௌத்த சிங்கள மக்களின் பொறுமைக்கும் எல்லையுண்டு. அதனை அவர்கள் தாண்டி விடுவார்கள் என்ற அர்த்தத்தில் பேசியிருந்தார். அவர் பேசிய விடயம் குருந்தூர்மலையில் நீதிமன்ற உத்தரவை மீறி புத்தர் சிலை ஒன்றை நிறுவ முயற்சித்தபோது அங்கு பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன், எஸ். வினோநோகராதலிங்கம், முன்னாள் வடக்கு மாகாண அமைச்சர் சிவநேசன் ஆகியோரின் தலைமையில் அதனைத் தடுப்பதற்காக ஒரு பெரும் போராட்டம் நடத்தப்பட்டு புத்தர் சிலை நிறுவும் முயற்சி தடுக்கப்பட்டது.

சரத் வீரசேகரவின் பேச்சு மீண்டும் மீண்டும் மிகஆக்ரோஷமாக இருந்தது. இப்படியான பேச்சுக்கள்தான் கடந்த காலங்களில் இன முறுகலை உருவாக்கி மிகப்பெரிய போரைக்கொண்டு வந்து இன்றைய இந்தப் பொருளாதாரச் சிக்கல், இலங்கையின் வங்குரோத்து நிலைக்கு மிக முக்கிய காரணங்களில் ஒன்றாக அமைந்திருந்தது என்பது அவருக்குத் தெரியாமல் உள்ளது. இந்த நிலைமையில் மீண்டும் மீண்டும் மத, இன முரண்பாடுகளைத் தூண்டி நாட்டில் மேலும் மேலும் அழிவுகளுக்கு இட்டுச் செல்லவே இத்தகைய நடவடிக்கைகள் வழிவகுக்கும்.

பௌத்த - சிங்கள மக்களே வாழ்ந்திராத ஒரு பிரதேசத்தில் பௌத்தம் சார்ந்த வழிபாடுகள் கடைப்பிடிக்கப்படுமானால், பௌத்தம் சம்பந்தமான விடயங்கள் கண்டுபிடிக்கப்படுமானால் அதனை அதை ஒரு மரபுரிமை சின்னமாகப் பாதுகாப்பதே நியாயமானது. அதனை விடுத்து பழைய பண்பாட்டுக்குரிய சின்னங்களை மீள உருவாக்கம் செய்து வழிபாட்டுக்குரிய இடங்களாக மாற்றுவது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல. தொல்லியல் சட்டங்களையோ அல்லது நடைமுறைகளையோ பின்பற்றாது இவ்வாறு வழிபாட்டுத் தலங்களை உருவாக்குவது அங்கு திட்டமிட்ட பௌத்த - சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்கான கால்கோளாகும்.

இது இனங்களிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவித்து நாட்டை அழிவுகளுக்கு இட்டுச்செல்லுமே தவிர நாட்டை முன்னேற்றவோ ஐக்கியத்தைக் கட்டியெழுப்பவோமாட்டாது. இதனை நாம் அனைவரும் நன்றாக உணர்ந்துகொள்ள வேண்டும்.

இலங்கையின் மூத்த தொல்லியல் அறிஞர்களான பேராசிரியர்கள் பரணவிதான, நந்தா விஜயசேகர, சேனக பண்டார போன்றவர்கள் இலங்கையில் காணப்படும் பௌத்த கட்டடக்கலை மரபுகள் தென்னிந்தியாவுக்குரியவை எனச் சந்தேகத்துக்கிடமின்றி குறிப்பிட்டுள்ளனர்.

பாலி சிங்கள இலக்கியங்களில் கூட குருந்தூர்மலை குருந்தனூர் எனக் குறிப்பிடப்பட்டு அது தமிழ் மக்கள் சார்ந்த இடம் என அடையாளப்படுத்தப்பட்டமையைக் காணலாம். 1815 இல் அங்கு அரச அதிகாரியாக இருந்த ஆங்கிலேயரான லூயிஸ் என்பவர் கூட குருந்தூரில் இந்து ஆலய இடிபாடுகளை நந்தியுடன் கண்டதாகக் கூறியுள்ளார்.

எனவே, மத அடையாளமானது இனத்தின் அடையாளமாகாது. பௌத்த மதத்தின் தோற்றுவாய் இந்துசமயம்தான். இலங்கையில் பௌத்தம் ஆரம்பத்தில் தமிழர்களாலேயே பின்பற்றப்பட்டது. ஆரம்பத்தில் பௌத்த மதத்தைப் பின்பற்றியவர்கள் தமிழர்கள். பின்பு அது மாறியதற்குக் காரணம் இலங்கை சுதந்திரம் அடைந்த பின்பு ஏற்பட்ட சிங்கள - பௌத்தம் என்ற நிலைப்பாடுதான் பிரச்னைகளை ஏற்படுத்தியது. உலகமெங்கும் பௌத்தம் உள்ளது. அங்கெல்லாம் அது மொழியுடன் சேர்த்து பேசப்படுவதில்லை. எந்த மதத்துக்கும் நாம் மாறானவர்கள் அல்ல. அதற்கு எனது பெயரே சான்று பகரும்" - என்றார். (ஐ)

## எரிபொருள் நிலை...

இந்தச் சம்பவம் தொடர்பில் அறிந்த பொலிஸார் அப்பகுதிக்கு விரைந்து, நால்வரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிறிது நேரத்தின் பின்னர் மூவர் கடும் எச்சரிக்கையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

மற்றைய ஒருவர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவரும் எச்சரிக்கையின் பின்னர் விடுவிக்கப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-2)

ஈழநாடு
Eelanadu

## மரண அறிவித்தல்



பிறப்பு 06 - 07 - 1944

இறப்பு 19 - 06 - 2022

### முத்துக்குமாரு பேரம்பலம்

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், முல்லைத்தீவு மல்லாவி 4ம் யுனிற் திருநகர் யோகபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு பேரம்பலம் அவர்கள் 19.06.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரு, கற்பகம் தம்பதிகளின் அன்பு மகனும், கணபதிப்பிள்ளை குஞ்சியாச்சிப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும்,சரஸ்வதி அவர்களின் அன்புக் கணவரும், கமலேஸ்வரன் (லண்டன்), தவசிங்கம் (கனடா), சுகிர்தா (சுவிஸ்), கணேஸ்வரன் (இலங்கை), வசந்தகுமார் (இலங்கை), சுரேஸ்வரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற கிருபாகரன், மதிவண்ணன், பாநிதி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான கோபாலுப்பிள்ளை, தியாகராசா மற்றும் சுப்பிரமணியம் (இலங்கை), குணசிங்கம் (இலங்கை), நடராசா(இலங்கை), கமலநாதன் (இலங்கை), யோகநாதன் (லண்டன்), சண்முகநாதன் (லண்டன்), மகேந்திரன் (கனடா), காலஞ்சென்ற கனகாம்பிகை, யோகாம்பிகை (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், யோகபத்மாவதி (லண்டன்), சந்திராதேவி (இலங்கை), கலாமதி (சுவிஸ்), மாலினி (இலங்கை), கனகாம்பிகை (இலங்கை), சந்திரமணி (இலங்கை), பத்மாவதி (லண்டன்), தயாநிதி (லண்டன்), குணசீலி (கனடா), தில்லைநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான கனகரட்ணம், கனகம்மா மற்றும் சோமசுந்தரம் (இலங்கை), தர்மரட்ணம் (கனடா), சங்கரலிங்கம் (இலங்கை), மகாலிங்கம் (இலங்கை), பரமேஸ்வரி(இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும்,தனலட்சுமி (இலங்கை), வேலுப்பிள்ளை (இலங்கை), அன்னசோதி (இலங்கை), விஜயறாணி (கனடா), சறோஜினிதேவி (இலங்கை), தனலட்சுமி (இலங்கை), காலஞ்சென்ற செல்வரட்ணம் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும், கலாதேவி (லண்டன்), கவிதா (கனடா), ஜெயக்குமார் (சுவிஸ்), சிந்துஜா (இலங்கை), சர்மிளா (இலங்கை), கிருபாலினி (பிரான்ஸ்), டுஷ்யந்தினி, கமலநாயகம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும்,தினிஸ், கனிஸ், மதுசன், பதுமநிதி, ஜெயந்திரன், ஜெனுசன், அஸ்வினா, சியாந்தினி, தரணிதரன், சாருயன், கிருபாகரன், கிருஷா, கனிதா, டனுசன், ஜீவகன், விதுஷன், கலைச்செல்வன், துவாரகன், கவிஅழகன், தனுசா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

*பார்வைக்கு :*
Wednesday, 22 Jun 2022 1:30 PM - 2:30 PM
Thursday, 23 Jun 2022 3:00 PM - 4:00 PM
Saturday, 25 Jun 2022 3:00 PM - 4:00 PM
Sunday, 26 Jun 2022 3:00 PM - 4:00 PM
Funérarium 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

*கிரியை :*
Wednesday, 29 Jun 2022 9:30 AM - 11:45 AM
Funérarium 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

*தகனம் :*
Wednesday, 29 Jun 2022 12:25 PM - 1:25 PM
Funérarium 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**கமலேஸ்வரன் - மகன்**

தொடர்புகளுக்கு
**கமலேஸ்வரன் - மகன்** Mobile : +447960940542
**தவசிங்கம் - மகன்** Mobile : +16478579971
**சுகிர்தா - மகள்** Mobile : +41798186611
**கணேஸ்வரன் - மகன்** Mobile : +94776548144
**வசந்தகுமார் - மகன்** Mobile : +94767446411
**சுரேஸ்வரன் - மகன்** Mobile : +33651253774
**பாநிதி - மகள்** Mobile : +33768546828

# எரிபொருளுக்கு காத்திருப்போருக்கு நீராகாரங்களை வழங்கி உதவுங்கள்

## வடக்கு மாகாண ஆளுநர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 23

**எரிபொருளுக்காக நீண்ட வரிசைகளில் மணிக்கணக் காக காத்திருக்கும் மக்களுக்கு உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் இயன்றவரை நீராகாரத்தை வழங்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.**

அது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்-

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவும் நிலையில் வடமாகாணத்திலும் மக்கள் மணிக்கணக்கில் வெயிலில் நீண்ட வரிசையில் காத்திருக்கிறார்கள்.

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருள் விநியோகம் இடம்பெற்று வருவதால் அதனைப் பெறுவதற்காக நோய் நிலைமை உள்ளவர்களும் எரிபொருளுக்காக மணிக்கணக்காக காத்திருக்கின்ற நிலைமையை நான் உணர்கிறேன்.

ஆகவே இயன்றவரை எரிபொருளுக்காக வரிசையில் காத்திருக்கும் மக்களுக்கு சமூக மட்ட அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் கொடை வள்ளல்கள் தற்போதைய தருணத்தில் நீராகாரத்தை வழங்கி உதவவேண்டும் - என்றார். (அ)

# எரிபொருள் பெற முயன்ற பதிலதிபர் தரக்குறைவாக திட்டி தீர்க்கப்பட்டார்

## அதனைக் கண்டித்து அவர் போராட்டம்

கிளிநொச்சி, ஜூன். 23

ஆசிரியர்கள் என்றால் இழக்காரமா? நாகரிகமாக பேசுங்கள் என தெரிவித்து பாடசாலை பெண் பதிலதிபர் ஒருவர் போராட்டத்தில் ஈடுபட்டார்.

கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் பெற்றுக்கொள்ள வந்த பெண் பதில் அதிபர் ஒருவரே தனது பிள்ளையுடன் இவ்வாறு முற்பகல் 10.30 மணியளவில் போராட்டத்தில் ஈடுபட்டார்.

அரச உத்தியோகத்தர்களுக்கு நேற்று எரிபொருள் வழங்கப்படமாட்டாது என எரிபொருள் விநியோகத்தர்களால் அறிவுறுத்தப்பட்டது. இந்த நிலையில் எரிபொருள் பெற்றுக்கொள்ள வந்த சிலரால் அரச உத்தியோகத்தர்களை தரக்குறைவாக பேசும் செயற்பாடுகள் பரவலாக இடம்பெற்றன.

இந்த நிலையில் கடமைக்கு செல்ல எரிபொருள் பெற்றுக்கொள்ள சென்ற குறித்த பெண் பதிலதிபரே இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டார். கடமைக்கு செல்லாவிட்டால் விடுமுறையாக்கப்படுகிறது.

கடமைக்கு செல்ல வந்த என்னை தரக்குறைவாக பேசுகின்றனர். கல்வி வேண்டாம், பெற்றோலே வேண்டும் என்கின்றனர். ஆசிரியர்கள் என்றால் தரக்குறைவானவர்கள் இல்லை. உங்கள் பிள்ளைகளுக்கே கல்வியை புகட்டுகின்றோம்.

இவ்வாறு சென்றால் பிள்ளைகள் முதல் எழுத்து கூட அறியாதவர்களாக வளர்வார்கள். எங்களுக்கு முறையான எரிபொருள் கிடைக்கவேண்டும். இல்லையேல் கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுக்கமுடியாது.

நாகரீகமின்றி தரக்குறைவாக பேசுமளவுக்கு ஆசிரியர்கள் இல்லை. இதற்கு நியாயமான தீர்வு வேண்டும். அதுவரை ஆசிரியர்கள் பணிக்கு செல்லாது போராட வேண்டும்.

இந்த விடயம் தொடர்பில் கல்வி அமைச்சர் மற்றும் தொழிற்சங்கத்துக்கு அறிவித்துள்ளேன். நிரந்தரமான தீர்வு கிடைக்கவேண்டும். எமது கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டும் - என்றார்.

குறித்த பெண் பதிலதிபருடன் பொலிஸார் மற்றும் பொதுமக்கள் சிலர் கலந்துரையாடி போராட்டத்தை கைவிடுமாறு கோரியிருந்தனர். நிரந்தர தீர்வு எட்டப்பட வேண்டும் என கூறிப் போராட்டம் கைவிடப்பட்டதுடன், குறித்த பதிலதிபர் பாடசாலை கடமைக்கு செல்வதற்கு எரிபொருள் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# வலி. தென்மேற்கு பாடசாலைகளுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 23

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பாடசாலை களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் செயல்பாடு வரவு - செலவுத் திட்டம் மூலம் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய, வலி. தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் அந்தோனிப் பிள்ளை ஜெபநேசன் தலைமையிலான குழுவினர் பாடசாலைகளுக்கு சென்று கற்றல் உபகரணங்களை வழங்கி வருகின்றனர்.

இதன்படி, நேற்று நவாலி வட்டாரத் தில் நவாலி சென். பீற்றர்ஸ் றோமன் கத் தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையை சேர்ந்த உதவிதேவைப்படும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது, மாணவர்களுக்கு வீட்டுத்தோட்ட முயற்சி தொடர்பான விழிப் புணர்வும் மேற்கொள்ளப்பட்டதுடன், இயற்கை உரம் தொடர்பான தேவைப்பாடும் தவிசாளரால் மாணவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இதன்போது, வலி. தென்மேற்கு பிர தேச சபையின் தவிசாளர் ஜெபநேசன், வலி. தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் நாகராசா பகீரதன், நவாலி சென். பீற்றர்ஸ் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் அதிபர் ரி. ரமேஷ் ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ - 3)







# வெடிகுண்டுகளுடன் யாழில் இருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன். 23

புலோப்பளைப் பகுதியில் வெடிமருந்து பெறும் நோக்கில் குண்டுகளை மறைத்து வைத்திருந்த இருவர் விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மோட்டார் குண்டுகள் மற்றும் ஆர்.பி.ஜி. குண்டுகளில் இருந்து வெடிமருந்துகளைச் சேகரித்து டைனமற் தயாரிப்பவர்களுக்கு விற்பனை செய்யும் நோக்கில் குண்டுகளை மறைத்து வைத்திருந்த இருவரே விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டு மருதங்கேணிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மருதங்கேணிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.06.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து- வழங்குபவர் உளவள துனையாளர் -யாழ் பாவாணன்
07.10 மணி: இயற்கைவழி-எஸ்.உதயசீலன்-சமூர்த்தி உத்தியோகஸ்தர்



7.15 மணி : கதைவழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ - மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**
1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-எங்கேயும் எப்போதும்,காஞ்சனா திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை

**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்
7.30 மணி : வெள்ளிடை நுட்பம்- தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : கச்சேரி ஆரம்பம்-இசை நிகழ்ச்சி



10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகதோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு